உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று

மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

பன்னிரண்டாந்தொகுதி.

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1913—1914.

உ

# செந்தமிழ்"ப் பன்னிரண்டாந்தொகுதியின் உள்ளுறை.


திகமான்நெடுமானஞ்சி:-ஸ்ரீமத்-T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள். ௩உ0

நுதாபக்குறிப்பு:—பத்திராதிபர். (அனுபந்தம் உ)

ந்தகக்கவிவீரராகவ முதலியார்காலம்:— ஸ்ரீமத்-வே. ஜோ. தம்பிப்பிள்ளையவர்கள், M. R. A. S. ௬௬

ரசகேசரி:— ,, ச. கந்தையபிள்ளையவர்கள். அக

க்கச்சொல்விளக்கம்:—,, ம. நா. சோமசுந்தரம்பிள்ளையவர்கள். ௫க

ழ்வார்திருநகரிச் ரசனங்கள்:— ,, A. M. சடகோபராமாநுஜாசாரியரவர்கள். ௬௯௬

யன்மொழிவாழ்த்து:-மதுரைத்தமிழ்ச்சங்கத்தார். (அனுபந்தம் க.)

லங்கைத்தமிழரசர்:-ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௩௬அ

லங்கைமஹாவம்சமும் தென்னிந்தியசரித்திர ஆராய்ச்சியும்:— ,, எஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், எம். ஏ. சஎஅ

ளம்பூரணம்:— ,, மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள். ௬௫

ழமண்டலப்புலவர்:— ,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள். ௩எ௫

வமவிளக்கம்:— ,, மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள். ௩௩௬

ருவினவுக்குவிடை:—பத்திராதிபர். ௬௯

ரொட்டுரை:—பத்திராதிபர். க௫௬

ம்பராதுகருத்தமைதி:—பத்திராதிபர். க௬க

லியப்தம் 512:—ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகரவர்கள். ௫0எ

சங்கீதத்தின்பெருமையும் அதன் உற்பத்தியும்:— ஸ்ரீமத்-ஆபிரகாம்பண்டிதரவர்கள். ௬௬௬

சம்பந்தமூர்த்திகள் காலம்:— ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள். ௩கஎ

சாணக்கியநீதிசாரம்:— ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௫

சாணக்கியநீதிவெண்பா:-,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். க0ச, கஉக, கஎஅ, உ0க

சுந்தரகாண்டம்:—ஸ்ரீமத்-M. S. சேஷையங்காரவர்கள். ௩௨௬, ௪௭௫

சுருதிவிசாரணை:— ,, S. சுப்பிரமணியசாஸ்திரியாரவர்கள். ௨௧௦

செல்வநூல்:— ,, R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L. ௧௧௦, ௧௩௦, ௧௯௫, ௨௨௩, ௨௫௭, ௨௮௧

சைவானுட்டான அகவல்:-,, சா. மு. பஞ்சநதம் அவர்கள். ௩௯௪

சோழன்கரிகாலன்:— ,, T.V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள். ௪௧

சோழன்செங்கணான்:— ,, T.V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள். ௧௭௩

தமிழியற்கைமொழி:— ,, கார்த்திகேயமுதலியாரவர்கள். ௩௯௮

தமிழெழுத்துக்களினது வடிவம்:— ,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள். ௨௦௭

தமிழ்நூல்களும் தமிழ்கமும்:— ,, சோமசுந்தரதேசிகரவர்கள். ௩௦, ௯௦

தமிழ்நேயர்களுக்கு ஒரு விக்ஞாபனம்:— பத்திராதிபர். ௨௫௬

திருக்கோளூர்ச் சாசனங்கள்:— ஸ்ரீமத்-A. M. சடகோபராமாநுஜாசாரியரவர்கள். ௨௩, ௧௯௦, ௨௬௫, ௩௪௪

திருப்புகலூர்ச் சாசனங்கள்:— ,, சோமசுந்தரதேசிகரவர்கள். ௬௮

திருமலைநாயக்கர்:— ,, N. R. சுப்பிரமணியசர்மாஅவர்கள். ௩௫௩, ௩௮௮

திருமழபாடியா-திருமழுவாடியா:— ,, சோமசுந்தரதேசிகரவர்கள். ௪௩௮

திருவிளையாடற்புராணம் 64-வது படல ஆராய்ச்சி:— ,, T.V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள். ௨௩௩

திவ்யப்ரபந்ததிவ்யார்த்ததீபிகை:—பத்திராதிபர். ௨௯

துடிக்குறி:—ஸ்ரீமத் T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள். ௧௮௭

துவாவிம்சதிசுருதியின் பொதுக்குறிப்பு:— ஸ்ரீமத்-ஆபிரகாம்பண்டிதரவர்கள். ௪௫௩

தேக ஆராய்ச்சி:— ,, V. S. அருணாசலம்பிள்ளையவர்கள். ௧௦, ௧௮௪, ௨௪௧, ௩௭௨

தொண்டைமான் சாசனம்:— ,, T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள். ௪௪௧

.ச்சினார்க்கினியர்:—ஸ்ரீமத்-S. சாமிநாதையரவர்கள். ருகூ
நோட்டீஸ் முதலியன:—மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜர். சருகூ
பஞ்சாயமுதலியசங்கங்களின் பழமையும் முறைமையும்:— } பத்திராதிபர். ௩சூரு, சக௩, சசூக
புரஞ்சனோபா..ி யானம்:— } ஸ்ரீமத்-கா. ஸ்ரீ. கோபாலாசாரியரவர்கள். கஉஎ, உருக, ௩அச
புறநிலைவாழ்த்து:— ,, மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள். ௩கூ
பொச்சாப்புமேமாப்பும்:-,, ச. பஞ்சாக்ஷரையரவர்கள். சூசூ
பொருளதிகார ஆராய்ச்சி-,, வே. முத்துஸாமிஐயரவர்கள், M.A., L.T. க௩
மணிப்ரவாளம்:— ,, கோபாலக்ருஷ்ணமாசாரியரவர்கள். சஅரு
மதிப்புரை:—பத்திராதிபர். க
மதிப்புரை:—பத்திராதிபர். எஅ, கககூ, கசூ0, உ00, உ௩க, ௩கசூ, ரு0அ
மதுரைத்தமிழ்ச்சங்கம்:—ஒரு தமிழ்நண்பன். உகூஉ
மாணிக்கவாசகர்கால ஆராய்ச்சி:— } ஸ்ரீமத்-கே. ஜி. சேஷையரவர்கள். சகக, சகஎ
மெய்புணர்தல்:— ,, பொ. முத்தையபிள்ளையவர்கள். ச0சூ
மேற்கோள்விளக்கம்:— ,, எஸ். இராதாகிருஷ்ணையரவர்கள். ௩௩0
மொழிநூற்கருத்து:— ,, கார்த்திகேயமுதலியாரவர்க. சசரு
யசோதரகாவிய ஆராய்ச்சி:— } ,, T. S. குப்புஸ்வாமிசாஸ்திரியாரவர்கள். கச0, உகஎ, உசரு, உஎ௩
வாதபித்தகபங்கள்:—வைத்தியகலாநிதி. கசகூ
வாழ்த்துக்கவி:—ஸ்ரீமத்-வே. முத்துஸாமிஐயரவர்கள், M.A., L.T. எசூ
வாழ்த்துப்பத்திரம்:-,, த. வே. உமாமஹேஸ்வரம்பிள்ளையவர்கள். எச

---

"செந்தமிழ்"ப் பன்னிரண்டாந்தொகுதியில் வெளிவந்தநூல்.

[முற்றுப்பெறாதது.]

மாறனலங்காரம்:—பத்திராதிபர். க, உ, ௩, ச, ரு, சூ, எ, அ, கூ, க0, கக, கஉ, பகுதிகள்.

---



இறமனுதபுரம் ராஜா

*ராஜராஜேஸ்வர சேதுபதியாகிய முத்துராமலிங்க சேதுபதி அவர்கள்*

*மதுரைத் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனுதிபதி*

**12—12—1913.**

கடவுள் துணை.

மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் மஹாராஜா

ஹிரண்ய கர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத

ராஜராஜேசுவர ஸேதுபதியாகிய

# B. முத்துராமலிங்க ஸேதுபதியவர்கள்

மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கு

அக்கிராசனாதிபதியாக விஜயஞ்செய்தபோது

ஷை சங்கத்தார் பாடிய

## இயன்மொழிவாழ்த்து.

வேலைநீர்முழு துண்டுல கந்தொழ
ஆரமாமலை தங்குபெ ருந்தவன்
மேலதாகத யந்துவ ழங்கிய தமிழ்மாது

நீதுலாவிய வெண்கதி ரிந்துவின்
ஆதபமாமர பொன்றிய தண்குடை
மீனகேதன பஞ்சவர் தந்துணை யமையாதே

சாலவொளிசை விஞ்சிய செங்கதிர்
மாகுலாதிபர் செம்பியர் தங்களின்
சார்புமேவின னென்றெவ ருஞ்சொலும் படியாக

சாரமார்தமி ழின்கழ கந்தனை
தாடியாளவி சைந்தபெ ருந்தகை
சாலுதாவலர் தங்கலி விண்டிட வருகோமான்

மேலவானக மன்றிய மொண்புகழ்
ராமநாதபு ரந்தனி லிங்கொளி
வீசுபாநுவு மொன்றுள தென்றுவந் தியல்பாட

மேவிவாழ்திரு பன்றன தன்புகொள்
பாலனாகிய துங்கன ருந்திறல்
வீரனெட்டொரு மம்பிகை செம்பதம் தொழுசீலன்

மாலையேதிக ரும்படி வந்துதொல்
சேதுநாடுசி றந்துந லம்பெற
வாகுமேருசு மந்துபு ரந்தருள் மகிபாலன்

மாசிலாதபெ ரும்புகழ் தங்கிய
ராஜராஜது ரந்தரன் ஸந்ததம்
வாழிவாழிவ ளம்பல கொண்டிரும் புவிமீதே

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கஉ.] பிரமாதீசஹூ கார்த்திகைமீ [பகுதி-க.
Vol. XII. November—December. 1913. No. 1.

### மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் ராஜா

## முத்துராமலிங்கசேதுபதியவர்களை

### நம் மதுரைத்தமிழ்ச்சங்கம்
### தலைவராகப் பெற்றிருப்பதுபற்றிப்
### பத்திராதிபரெழுதிய
### மதிப்புரை.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகசபையாரால், 1913ஹூ டிசம்பர்மீ 12உ கூடிய சபையில், மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் ராஜா ஸ்ரீமத் முத்துவிஜய ரகுநாத ராஜராஜேச்வர சேதுபதியாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்கள், சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பெற்று, நிர்வாகசபையாரின் வேண்டுகோட்கிணங்கி, டிசம்பர்மீ 15உ சங்கத்துக்கு விஜயம்செய்து அன்றுமுதல் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபத்தியம் வகித்துவருகிறார்கள்.

அவர்களே நம் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபத்தியம் வகிக்கத் தகுதியும் உரிமையும் உடையவர்களென்பதுபற்றியும், அவர்களாற் சங்கத்துக்குப் பலவித நன்மைகளும் உண்டாக இடமுண்டு என்பதுபற்றியும் சுருக்கமாயெழுதிய சில பாடல்கள் பின்வருமாறு காண்க:—

## ஆசிரியப்பா.

பூமகள்பற்றியடியபூதரத்தான்
மாமகள்பற்றியமணிமலர்க்கரத்தான்
வலங்கொண்டநேமியான் மன்னுயிர்புரப்பான்
ஆதலின் அரசன் மாலெனுமென் றான்றோர்-
சாற்றலா லிசைதமிழ்ச்சங்கமுந்தாங்குதல்
தகுதி யென்னும் பகுதியினமைந்து;
பண்ணியபுகழ்திகழ்பாண்டியர்முன்னாள்
எண்ணியபுலவர் நண்ணிய அவையத்து
இருந்து திருந்த அருந்தமிழாய்ந்தன
ரென்பதுபொருந்தவும், மன்பதைதிருந்தவும்
கற்றபுலவர்கருதக் கசிந்து,
மற்றுளசெல்வர்மனதுக் கிசைந்து,
புலவர்சான்றபுகழ்த் தமிழ்ச்சங்கத்-
தலைமைபூண்டு தகைசிறந்தனனால்:
நாவலர்தமக்கும், நன்மொழிபுணர்க்கும்-
பாவலர்தமக்கும் பதக்கமும், கடகமும்,
போர்வையும், பட்டும், பொன்னும், பிறவும்
வரிசையானோக்கிப் பரிசளித்துவப்போன்;
எண்ணரியவுணருநுண்ணியவுணர்வொடு,
கல்வி, கேள்வி, கட்டுரைவன்மை,*
ஆள்வினையுடைமை, அறிந்துசெய்கை,

* கட்டுரைவன்மை-செய்யுளியற்றுந்திறமை.

தெரிந்துதெளிதல், தெரிந்துவினையாடல்,
ஊக்க முதலியவுயர்குணம்பலவுடன்
ஆக்கமு முடையோன்! அவன்யாரெனினே!
திருவணையென்னுமொருபுணைகண்டே
ஓதிய வேதியராதியர் பிறவிப்-
பெருங்கடல்கடக்கும் இருங்கடற்றுறைவன்;
மந்தமாருதம் நறுமலர்மணங்கமழுங்
கந்தமாதனமெனுங் கனகுலவரையான்;
பண்டு அமிழ்தெடுத்தபாற்கடல்கடுத்த
வண்டமிழ்கொடுத்த வையையாறுடையோன்;
பைந்தமிழ்நாட்டுட் பலவினுமினிய
செந்தமிழ் வழங்கும்செம்பிநாடுடையோன்;
பூமிநாளும்புரந்தனரமர்ந்த
ராமநாதபுரமெனுநகரான்;
தேவதிலகன்; செம்பியர்சேகரன்;
இந்திரதிருவின்ஐந்தருநிழல்சென்-
றெய்தினும், எய்தாச்செய்தவப்பயனும்
சேதுகாவலிற்சிறந்தறம்வளர்க்கு
முதறிவுடையமுதுகுடிப்பிறந்தோன்;
நம் தமிழ்ச்சங்கம் நாட்டலிற் றுணையாய்ச்
†செந்தமிழ்க்கலையுளைச்செவ்விதினிறுவிப்
புத்தகம்பலவும் புலவரொடு பொருளும்
வித்தகருவப்ப வேண்டுவ அளித்த-
ஹிரண்யகெர்ப்பயாஜிரவிகுல-

† செந்தமிழ்க்கலையுள்-செந்தமிழ்க்கலாசாலை.

முத்துவிஜயரகுநாதபாஸ்கர-
சேதுபூபதி செய்தவம் திரண்டு
பூதலத்துதித்த புண்ணியப்புதல்வன்;
ராஜராஜேஸ்வர முத்து-
ராமலிங்கசேதுபூபதியே:
அன்னேன் தமிழை அமிழ்தெனப்போற்றிப்
பொன்னாட்டிறைபோற் புலவரைப்புரந்து
பல்லாண்டுபல்லாண்டுவாழ்க
எல்லாம்வல்லஇறைபருள்படைத்தே.

கலித்துறை.

தன்னீர்முகந்துதரையுயிர்வாட்டந்தணிக்குமுகி-
னன்னீர் திரண்டு நதியாகி நாட நதிபதியாய்
முன்னீரமைந்தமுறை யமைந்தான். முத்துராமலிங்க-
மன்னீர்மையான் மதுரைத்தமிழ்ச்சங்கம் வளம்பெறவே.

வெண்பா.

பூத்துமணக்கும்பொலன்கொம்பெனப் பருவம்-
வாய்த்த மதுரைத்தமிழ்ச்சங்கம்—காய்த்துப்
பலனளிக்கும். சேதுபதி பதியாய்மன்னி
நலனளிக்குந்தண்ணளிக்குநன்று.

இங்கு "ஸபாகல்பதரு" என்னும் ஸ்லோகார்த்தம் ஸ்மரிக்கத்தக்கது. கொம்பிற்கியையுப் பதி - கிளைக்கன்றும், அளி - வண்டுமாம். வண்டுகிண்டிய மலர்க்கொம்பே காய்த்துப் பலனளிக்குமென்பது புதியனபுகுதல். பூத்துமணக்கும் பொலன்கொம்பென்றதற்கு முதுக்குறைவுற்று மணத்தைவிழைந்தமடக்கொடியென்று தொனிப்பொருளுமாம். மற்றுள்ளன மூன்றிடத்தும் எற்றபெற்றிகொள்க.

பத்திராதிபர்.

உ

# சாணக்கியநீதிசாரம்.

## விநாயகவணக்கம்.

*பொன்னுலகும் மண்ணுலகும் போற்றவருட் சித்திதரும்*
*முன்னவனும் யானை முகனடிகள்—சென்னிவைத்துச்*
*சாணக் கியநீதி சாரப் பொருளுரைப்பாம்*
*யாணர்த் தமிழ்க்கவிகொண் டீண்டு.*

(:o:)

## நூல்.

ஶ்லோகம்

வித்வத்வம் ச ந்ருபத்வம் ச நைவ துல்யம் கதாசந ।
ஸ்வதேஶே பூஜ்யதே ராஜா வித்வான் ஸர்வத்ர பூஜ்யதே ॥

வெண்பா.

*சொல்லணிசேர் கல்வித் துறைபோய பண்டிதர்தாம்*
*வெல்லுமிகல் வேந்தரினும் மிக்கவர்காண்—சொல்லுங்கால்*
*வேந்தர்க்குத் தந்நாடே மேன்மைதரும் பண்டிதர்க்குச்*
*சேர்ந்தவிட மெல்லாஞ் சிறப்பு.*

---

ஶ்லோகம்

பண்டிதே ச குணாஃ ஸர்வே மூர்கே தோஷா ஹி கேவலம் ।
தஸ்மான் மூர்கஸஹஸ்ரேஷு ப்ராஜ்ஞ ஏகோ விஶிஷ்யதே ॥

வெண்பா.

*பேதையர்பாற் றோன்றுவன வெல்லாம் பிழையாகும்*
*மேதையர்பா லெப்பிழையு மேவாதே—ஆதலினால்*
*பேதையர்கள் பன்னூறு பேருள்ளுங் கற்றுணர்ந்த*
*மேதையுடை யானொருவன் மேல்.*

ஶ்லோகம்

𑌮𑌾𑌤𑍃𑌵𑌤𑍍 𑌪𑌰𑌦𑌾𑌰𑍇𑌷𑍁 𑌪𑌰𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇𑌷𑍁 𑌲𑍋𑌷𑍍𑌟𑌵𑌤𑍍 ।
𑌆𑌤𑍍𑌮𑌵𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌸 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃 ॥

வெண்பா.

பிறருயிரெல் லாந்தனது பேருயிரே யென்றும்
பிறர்பொருளை மட்பிண்ட மென்றும்—பிறர்மனைவி
ஈன்றாளே யென்று மெவன்காண்பா னேயவனே
சான்றோ னெனப்படுவான் றான்.

———— :o:————

ஶ்லோகம்

𑌕𑌿𑌂 𑌕𑍁𑌲𑍇𑌨 𑌵𑌿𑌶𑌾𑌲𑍇𑌨 𑌗𑍁𑌣𑌹𑍀𑌨𑌸𑍍𑌤𑍁 𑌯𑍋 𑌨𑌰𑌃 ।
𑌅𑌕𑍁𑌲𑍀𑌨𑍋𑌪𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑍋 𑌦𑍈𑌵𑌤𑍈𑌰𑌪𑌿 𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑍇 ॥

வெண்பா.

தக்ககுலத் தேபிறந்துஞ் சாத்திரங்கள் கற்றுணராற்
கக்குலத்தா லோர்பயனு மாவதில்லை—மிக்ககுலம்
இல்லானே யானாலு மேதமினால் கற்றோனை
எல்லாருங் கொள்வா ரினிது.

———

ஶ்லோகம்

𑌰𑍂𑌪𑌯𑍌𑌵𑌨𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌾 𑌵𑌿𑌶𑌾𑌲𑌕𑍁𑌲𑌸𑌮𑍍𑌭𑌵𑌾𑌃 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑌾 𑌨 𑌶𑍋𑌭𑌨𑍍𑌤𑍇 𑌨𑌿𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌾 𑌇𑌵 𑌕𑌿𑌂𑌶𑍁𑌕𑌾𑌃 ॥

வெண்பா.

உருவ மிளமை யுயர்குலஞ்சேர் தோற்றம்
மருவினுமென் கல்வியிலா மாந்தர்—ஒருசிறிதும்
வாசமிலா முண்முருக்கின் வான்மலரை யொப்பரெனப்
பேசுவரே நூலோர் பெரிது.

————(:o:)————

ஶ்லோகம்

[illegible] ।
[illegible] ॥

வெண்பா.

தாரகைகட் காபரணஞ் சந்திரனே சுந்தரஞ்சேர்
நாரியர்கட் காபரணம் நாயகனே—பாருலகுக்
காபரணஞ் செங்கோ லரசனே யாவர்க்கும்
ஆபரணங் கல்வியே யாம்.

---

ஶ்லோகம்

[illegible] ।
[illegible] ॥

வெண்பா.

புத்திரனைக் கல்விப் பொருளடைய வையாத
அத்தனுந் தாயு மரும்பகைவர்—புத்திரனும்
மிக்கோர் சபையில் விளக்கமுறு னன்னத்துட்
கொக்கேபோன் மேன்மை குறைந்து.

—:(o):—

ஶ்லோகம்

[illegible] ।
[illegible] ॥

வெண்பா.

தாரகைக ளாலகற்றத் தான்முடியாப் பேரிருளை
ஈரமதி யொன்றே யெளிதகற்றுங்—காரியம்போல்
உத்தமனாய் நற்குணனா யோங்கு மொருமகனே
எத்துயருந் தீர்த்தகற்று மீண்டு.

---

ஶ்லோகம்

[illegible] ।
[illegible] ।

### வெண்பா.

ஐந்துவய தாமளவு மன்னை யுடன்பேணி
ஐந்தின்பின் பத்துவய தாமளவும்—மைந்தர்களைக்
கண்டிக்க வீரெட்டுக் காணுமேன் மித்திரன்போற்
கொண்டிடுதல் வேண்டுங் குறித்து.

---

### ஶ்லோகம்

லாலநே பஹவோ தோஷா: தாடநே பஹவோ குணா: ।
தஸ்மாத் புத்ரஞ்ச ஶிஷ்யஞ்ச தாடயேந்ந து லாலயேத் ॥

### வெண்பா.

அந்தமிலா வாதரவா லாமே பிழையனைத்தும்
பந்தமுறு தண்டனையாற் பல்குணமும்—வந்தடையும்
ஆகையினாற் சீட னரும்புதல்வ னென்றிவரைப்
பாகமுறு தண்டனையாற் பற்று.

---

### ஶ்லோகம்

ஏகேநாபி ஸுவ்ருக்ஷேண புஷ்பிதேந ஸுகந்திநா ।
வாஸிதம் தத்வநம் ஸர்வம் ஸுபுத்ரேண குலம் யதா ॥

### வெண்பா.

நன்மணஞ்சேர் பூநிறைந்த நன்மரமொன் றுன்முற்றப்
பன்மரஞ்சேர் காடும் பரிமளிக்கும்—தன்மையென
மிக்ககுணம் பற்பலவா மேவுமொரு புத்திரனல்
அக்குலமு மிக்குயரு மார்ந்து.

—(:o:)—

### ஶ்லோகம்

ஏகேநாபி குவ்ருக்ஷேண கோடரஸ்தேந வஹ்நிநா ।
தஹ்யதே தத்வநம் ஸர்வம் குபுத்ரேண குலம் யதா ॥

### வெண்பா.

தீயமர மொன்றுநின்று செந்தீ வளர்ந்துதிக்க
ஆய வனமுற்று மழலாகும்—ஆயதிறம்

போலக் குணமில்லாப் புத்திரனுந் தன்குலத்தைச்
சாலக் கெடுத்துவிடுந் தான்.

---

ஶ்லோகம்

அஶ்ருத: ஶோபதே மூர்கோ வஸ்த்ராலங்காரபூஷித: ।
தாவச்ச ஶோபதே மூர்கோ யாவத்கிஞ்சிந்ந பாஷதே ॥

வெண்பா.

ஆடையான் மற்றை யணியா லலங்கரித்துப்
பீடுடைய வந்த பெருமூடன்—நீடவையில்
எத்துணையும் பேசா தடங்கி யிருப்பானே
அத்துணையும் மேன்மை யவற்கு.

———:o:———

ஶ்லோகம்

விஷாதப்யம்ருதம் க்ராஹ்யமமேத்யாதபி காஞ்சநம் ।
நீசாதப்யுத்தமாம் வித்யாம் ஸ்த்ரீரத்நம் துஷ்குலாதபி ॥

வெண்பா.

அழுக்குள்ளே செம்பொன்னு மாலத் தமுதும்
இழுக்குடைய நீசனிடத் தேய்ந்த—விழுக்கலையும்
எள்ளலுறுங் கீழ்க்குலத்தி லெய்துமெழிற் கன்னிகையுங்
கொள்ளலா மென்பார் குறித்து.

———:(o):———

ஶ்லோகம்

உத்ஸவே வ்யஸநே சைவ துர்பிக்ஷே ஶத்ருவிக்ரஹே ।
ராஜத்வாரே ஶ்மஶாநே ச யஸ்திஷ்டதி ஸ பாந்தவ: ॥

வெண்பா.

வேந்தர் கடைத்தலையில் வெம்போரி னல்குரவில்
ஏய்ந்த வியசனத்தி லீமத்தில்—வாய்ந்தமகிழ்
தேங்கும் விழவதனிற் சேர்ந்துநிற் பானெவனே
ஆங்கவனே நல்லுறவ னாம்.

(வரும்.)

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை,
சுன்னாகம்.

# தேக ஆராய்ச்சி.

நம் தேகத்தேகுடிகொண்ட தேகியானவன் தேகத்தை அபிமானித்துவளர்த்துத் தனது பூர்வஜன்மங்களில்வாய்ந்த கர்மத்தின் சுகதுக்கங்களையனுபவிக்கக் கருவியாய்மாத்திரம் அமைந்துளனோவென்று யோசிக்கின் அது அப்படியனுபவித்து நற்கதியடைய ஏற்பட்ட ஒருகருவியேயென ஆன்றோர் பொருள்கொள்ளினும் தேகத்தை ஆராயுமிடத்து அது வேறுசில உபயோகங்கட்கு மமைந்துளதெனக் காணப்படுகின்றது.

தேகம், ஸ்தூல சூட்சும பஞ்சபூதங்களை உரியபிரமாணமாகச் சேர்த்து அமைக்கப்பட்டுள்ளதென்று தெரிகிறோம். சூட்சுமதேகம் அதிருசியமும் ஸ்தூலதேகம் திருசியமுமானதன்றோ. ஸ்த்ரீ புருஷ சம்பந்தத்தால் புருஷனில் உற்பத்தியான பனித்துளிபோன்ற ஒரு துளிவிந்துவில் வசித்துவரும் சூட்சுமதரிசனயந்திரத்தால் காணக்கூடிய அநேக ஜீவிகளிலொன்று கர்ப்பபாத்திரவழியாய் அதிவிரைவிற் சஞ்சரித்து ஸ்த்ரீயின் வித்துக்கருவிகளில்வசிக்கும் தனைப்போற்பிரமாணமுடைய பிராணியுடன்கலந்து இரண்டுமொன்றாய் ஓர் உருக்கொண்டு அண்ட ஆகாரமாய்த் தாயின் உணவின்சத்து ரசங்களடங்கிய ரக்தத்தினின்றும் தனக்கு வேண்டியவுணவை ரக்த நாடிகள்வழியாய் ஆகர்ஷித்து ஒன்று இரண்டாகவும் இரண்டு நான்காகவும் நான்கு பதினாறாகவும் இரட்டித்தபெருக்கத்துடன் அநேக சிறுபிராணிகளாய்ப் பெருகித் தேகஅமைப்புக்குத்தக்கபடி வெவ்வேறுகூட்டங்களாய்ப்பிரிந்து, ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வோர் உறுப்புக்கள் அமைக்கவேற்பட்டு நம் தேகத்தில் அடங்கிய மாம்சம் எலும்பு மஜ்ஜை ரக்தம் நாடி நரம்புமுதலிய பலவித திருசிய அவயவங்களாகின்றன.

காலப்பிரமாணமோவெனில் ஸ்த்ரீபுருஷஜீவர்களின் கர்ப்பப் பாத்திரத்தில் ஏகோபித்த ஒருவாரத்தில் ஏற்பட்டஅண்டம் அரைக் கால்இஞ்சு குறுக்களவுள்ளதாயும், இரண்டுவாரத்திற்குள் காலே அரைக்கால்இஞ்சு குறுக்களவுள்ளதாயும், நான்குவாரத்தில் ஒரு

புருவின் அண்டப்பிரமாணமாய் அதினுள்ளடங்கியசிசு ஒருஅங்குலத்தின் மூன்றில்ஒருபாகநீளமாயும், இரண்டுமாதத்தில் ஒருகோழியின் அண்டப்பிரமாணமாய்ச் சிசு ஒன்றேஅரைக்கால் அங்குலநீளமும் முக்கால்தோலாநிறையு முள்ளதாயும், மூன்றும்மாதத்தில் ஒரு கிச்சிலிப்பழப்பிரமாணமும் சிசு மூன்று அல்லது நான்கு அங்குல நீளமும் ஏழரைத்தோலா நிறையுமுள்ளதாயும், நான்காம்மாதத்தில் அண்டவடிவுகுறுகிச் சிசுவடிவாய் ஐந்து, ஐந்தரை அங்குல நீளமும் ஏறக்குறைய இருபதுதோலா நிறையுமுள்ளதாயும், ஐந்தாம்மாதத்தில் ஒன்பதங்குலநீளமும் ஒரு இருத்தல் நிறையுமுள்ளதாயும், ஆறும்மாதத்தில் ஒருஅடிநீளமும் இரண்டு, இரண்டரை இருத்தல் நிறையுமுள்ளதாயும், ஏழாம்மாதத்தில் பதினைந்தங்குலநீளமும் மூன்று மூன்றரைஇருத்தல் நிறையுமுள்ளதாயும், எட்டாம்மாதத்தில் பதினாறங்குலநீளமும் நான்கிருத்தல் நிறையுமுடையதாயும், ஒன்பதாம்மாதத்தில் பதினெட்டங்குலநீளமும் நான்கரையிருத்தல் நிறையுமுடையதாயும், பத்தாம்மாதத்தில் இருபதங்குலநீளமும் ஏழு இருத்தல் நிறையுமுடையதாயும் வளர்ந்து வெளிப்படுகின்றது.

இப்படி வெளிப்போந்த சிசுவின்றேகம் ஒன்றென்றன்றோ கொள்ளப்படுகின்றது. ஆனால் முன்சொன்னபடி அணுப்பிரமாணமான அண்டம் பின்னபின்னமாய்ப் பகுக்கப்படும்பொழுது ஒவ்வோர் அணுவும் தேகியுடையதாய், பிறப்பு வாழ்வு இறப்பென்னும் மூவகையவஸ்தைகட்கும் உட்பட்டு நம் தேகத்தின் பலபாகங்களின் அம்சங்களாய்ப் பெருகிவளர்ந்து தேகமாகின்றன. கேசமொன்று உதிர்ந்துவிடில் வேறுகேசமுண்டாவதும், நகமொன்று விழுந்துவிடின் வேறு நகமுண்டாவதும், தேகத்தில் ரணமொன்றேற்படின் அவ்விரணம் மூடுபட்டு ஊன்வளர்ந்து சொஸ்தப்படுவதும் இம்மூன்றவஸ்தைகளின் திர்ஷ்டாந்தமாம்.

ஆகவே நந்தேகம் நந்தேகிக்கு இடமாயிருப்பதுமன்றி லட்சோபலட்சமான தேகிகட்குமிடமாயிருக்கின்றதாய் நாம் தெரிந்துகொள்ளுகிறோம். தேகத்தகத்தே குடிகொண்ட அணுப்பிரமாணமான தேகங்கட்குரிய தேகிகட்கு இடமாயிருப்பதுமன்றி தேகத்தின்புறத்துள அநேகஜீவிகட்கும் வாஸஸ்தானமாய் ஏற்பட்டுவிடுகின்றது.

நம் குடலில்வாழும் பெரும்புழுக்களும் கிருமிமுதலிய சிறு புழுக்களும் திருசியமானவையே. இவை நம் தேகத்தே உற்பத்தியாகின்றவையென்று எண்ணுவது தவறு. இவை அணுப்பிரமாணமான அண்டங்களாய் நாமுட்கொள்ளும் போஜனபதார்த்தங்களிலோ ஜலம்முதலிய பானீயபதார்த்தங்களிலோ பெருகிப்பரவியிருக்க நாம் அப்பதார்த்தங்களை அதிருசியமாயிருக்கும் அவ்வண்டங்களுடன் புசித்துவிடுவதால் அவை குடலில்தங்கி நம் தேகபோஷணத்திற்கமைந்துள ரசவஸ்துக்களைப்பருகிப் பெருகிவளர்ந்து நம் தேகத்திற்குப் பாதையுண்டுபண்ணுகின்றன. இவைகளிற் பல பெரும் வியாதிகட்குக் காரணமாய்த் தேகவலுவைக்குன்றச்செய்து ஆயுளையும் குறைத்து விடுகின்றனவன்றோ.

ஆகாம்ய சஞ்சித பிராரப்தத்திற்கேற்பப் பலவியாதிகளமைந்துளவெனக்கொள்ளினும் இடைவிடாநிஷ்டையில் ஆனந்தித்திருக்கும் மானுஷ சிரோமணிகளான ஜீவன்முக்தர்களுக் கம்மூவகைவாதைகளும் அகன்றுபோவதுபோல் இடைவிடாமுயற்சியுடைய புமான்களுக்குச் சுககாயம் பெற்றுத் திடசித்தம்பெற அப்பெரும் வியாதிகட்கு ஏதுவாயிருக்கும் அவ்வணுப்பிராணிகள் தேகத்தைப்பாதிக்காதகற்றக்கூடும். அதிருசியமாகிய அப்பிராணிகளில் சிலவற்றை முறையே கூறத்தொடங்குவோம்.

(தொடரும்.)

---

V. S. அருணைசலம்பிள்ளை,
Sub Assistant Surgeon,
Central Jail, Salem.

3—12—13.

# பொருளதிகார ஆராய்ச்சி.

## பண்டைக்காலத்துப் போர்த்தொழில் முதலியன.

[“செந்தமிழ்” தொகுதி கக-ல் ௪௦உ—ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இனி வாகைத்திணைக்குவகுத்த இலக்கணத்தால் அறியற்பாலன கூறுவோம்.

இதுகாறுங்கூறிவந்ததிணைகளில் நிகழ்ந்தஒழுக்கங்களெல்லாம் அரசர்க்கே யுரியனவாக, வெற்றிநிகழ்ச்சியைக்கூறும் இத்திணை எல்லாமாந்தர்க்கும் பொதுவானது. வெற்றி, போர்க்களத்து ஆயுதங்கொண்டுபொருதுபெறுவது ஒன்றுமாத்திரமன்றே; கல்வியிலும், வாணிகத்திலும், பிறவற்றிலும் தன்னை யொருவன், பிறர்க்குமேம்பட்டவனகச் செய்துகொள்ளுமிடத்தும் வாகைத்திணைபொருந்துமென்பது ஆசிரியர்கருத்தாதல்,

“ தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்த லென்ப ”

என்று அவர் அதற்குச் சூத்திரம்செய்ததால் அறியப்படும். இது,

“ பார்ப்பன வாகை வாணிக வாகை
வேளாண் வாகை பொருந வாகை
அறிவன் வாகை தாபத வாகை ”

எனப் புறப்பொருள்வெண்பாமாலையிலும், “ நான்குவேதத்தினையுங் கற்றவன், தாபதர்க்கரசாய்ச் செம்மாந்திருக்கும் ” முதலிய அதன் உரையாலும், கொள்ளக்கிடக்கும். இவற்றையெல்லா முள்ளடக்கித் தொல்காப்பியனார்,

“ அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபி னரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணும்

அனைநிலை வகையோ டாங்கெழு வகையில்
தொகைநிலை பெற்ற தென்மனூர் புலவர் "
என்று சூத்திரம் செய்தது இங்கு நோக்கத்தக்கது.

இனிக் காஞ்சித்திணையின் இலக்கணத்தால் அறிந்துகொள்ளற் பாலன யாவை என்று ஆராய்வோம். யாக்கை, செல்வம், இளமை முதலிய இவ்வுலகத்து நிலைபெற்றுநில்லா என்பதைக்கூறும் காஞ்சி யென்று முன்னரேசொல்லப்பட்டது. இவற்றின் நிலையாமை யுணர்தலே நிலைபெற்ற வீட்டின்பம்பெறுதற்குக் காரணம் ஆதலால், காஞ்சியில், வீடுபேற்றுக்குநிமித்தம் விரித்துக்கூறினரென்பது ஆயிற்று. வீடுபேறுநிமித்தமாகச் சான்றோர் பல்வேறுநிலையா மையை அறைந்த 'மதுரைக்காஞ்சி' இதற்கு உதாரணமாம்.

இந்நிலையாமையைச் சான்றோர், " எந்நா ளாயினுங் கூற்றுவன் வருவன், அந்நா ளவனைப் போற்றினும் போகான்......" முதலியன கூறி இளையோர்க்கு அறிவுறுத்துவர் என்பதும், அங்ஙனம் அறி வுறுத்தப்பெற்ற இளையோரும், அதனையுணர்ந்து, தக ஒழுகுவர் என்பதும், " மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்" என்று தொல்காப்பியர்கூறியதாற் போதரும்.

போர்க்களத்து வீரர்கள், இந்நிலையாமையை உணர்ந்து, தம் முயிரைப் பொருட்படுத்தாது, மிக்கவீராவேசங்காட்டி யொழுகுவர். தாம் புண்ணுற்றுத்தளர்ந்தவழி, பகைவர்கையாற்கொல்லப்படுதற்கு இசையாது, தாமே தமது புண்ணினைக் கிழித்துக்கொண்டு, தற் கொலைசெய்துகொள்ளுவர். இதற்கு, "புண்கிழித்து முடியும் மறத்தி னானும்" என்பது இலக்கணம்.

இக்காலத்துப் போர்த்திறத்தாற் சிறந்துவிளங்கும் ஜப்பான் தேசத்துவீரர்களிற் பலர், சில ஆண்டுகளுக்குமுன் நடந்த ருஷிய ஜப்பானியயுத்தத்தில், இங்ஙனமே, பகைவர்கைப்பட்டு வசையுறு வதற்கு ஒவ்வாது, தம்மைத்தாமே புண்செய்துகொண்டு மாய்ந்தனர் என்பது நம்மிற் பலர்க்கும் ஞாபகத்தில் இருக்கலாம். தற்கொலை பிறவிடங்களிற் பாவமுடைத்தெனினும், சமர்க்களத்து அது மறக் காஞ்சி என்று பெயர்பெற்றுப் புகழினைவிளைக்குமென்பது இதனாற் கொள்ளக்கிடக்கின்றது.

இன்னும் இக்காஞ்சித்திணையின் துறைவிரிகூறுமிடத்துப் போர்க்களத்துப்பட்ட வீரனுடைய மனைவிசெய்தி மிகவிளக்கமுறக் கூறப்பட்டிருக்கிறது.

கணவனிறந்தவுடன் அவனோடு மனைவி இறப்பது அக்காலத்துப் பெரும்பாலும் வழக்கமாயிருந்தது. மனைவியர், மனப்பூர்வமாகவே உடனிறத்தற்கு இயைந்தனர் என்பது கீழ்க்காட்டப்படும் செய்யுட்களால் அறியப்படும்.

"நீத்த கணவற் றீர்த்த வேலிற்
பெயர்த்த மனைவி காஞ்சி யானும்"

"கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்"

"காதல னிழந்த தாபத நிலையும்"

எனத் தொல்காப்பியனார் இலக்கணங்கூறியதனால் இவ்வழக்கம் தமிழ் நாட்டில்வழங்கிவந்ததென்பது வெளிப்படை.

புறநானூற்றில், பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு, தீப்பாய்வாளை, அங்ஙனம் செய்தலைத் தவிர்க எனக் கூறியவர்க்குப் பதிலுரைத்தசெய்யுளாகிய,

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே."

என்பதனுல், கணவற்பிரிந்தமனைவி தீப்பாய்தல் வழக்கமென்பதும், அத்தீக்கு அவள் அஞ்சுபவளல்லள் என்பதும், தன்கணவனுடன் தீப்பாய்ந்து ஒழியாக்கால் நெய்யின்றி, சோற்றைக் கீரையுடன்கலந் துண்டு, பாயில்லாப்பாழ்ந்தரையிலே துயின்று, காலங்கழிப்பள் என்பதும் போதரும். இங்ஙனம், கைம்மைநோன்பு கைக்கொள்வது ஒன்று, அன்றித் தீப்பாய்வது ஒன்று ஆகிய இதுவே கணவனைப் பிரிந்த காரிகைசெயல் என்பது,

> " காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
> ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது
> இன்னுயி ரீவர் ஈயா ராயின்
> நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர் "

என மணிமேகலையிற் கூறியிருப்பதனுலும் அறியப்பெறும்.

இவ்வழக்கம் கொஞ்சகாலத்துக்குமுன்னரும் இருந்ததென்பது, செஞ்சிக்கோட்டைக்குச் சிற்றரசனுயிருந்த தேசிங்குராஜன்சரித்திரத்தை, கொச்சைத்தமிழ்நடையில், சிறுவர்படித்தற்கெழுதப்பட்டிருக்கும் "தேசிங்குராஜன்கதை" என்னும்புத்தகத்தில், அவன் நவாப்போடு சண்டைசெய்து, தன்னன்பன் இறந்தமைகாரணமாகத் தன்வாளாற் றன்னையேமுடித்துக்கொள்ள, அச்செய்திகேட்ட அவன் மனைவி, முதலில் தன் கணவன்மேற்பட்டகாயம் மார்பிற்பட்டதேயன்றி முதுகிற்பட்டதன்று என்பதைத்தெரிந்துகொண்டு, பின்னர்த் தீப்பாய்ந்தனள் எனக் கூறப்பட்டிருக்கின்றமையால் தமிழ்நாட்டு வீரர்களதுபெருமைக்கேற்பவே, அவர்மனைவியர்களும் ஒழுகிவந்தனர் என்பது தெரியவருகின்றது.

தமிழ்வீரர்களுடைய மனைவியர்தன்மை இவ்வாறுக அவரைப் பெற்றுவளர்த்த தாய்மார்தம் தன்மை சொல்லுவாம்.

தன்மகன் போர்க்களத்து இறந்தால், அதுபற்றித் தாய் மனம் வருந்தாது, அவன் முதுகுகாட்டித் திரும்பியோடிவராமல், போரின் கண்ணே வீரங்காட்டியமைக்கு மகிழ்வள்.

தன்கணவன் பொருதுமாய்ந்தபோருக்கே, ஒருத்தி தன் மக்களை ஒருவர்பின் ஒருவராக அனுப்பி, அவர்களும், அங்குப் புறங்காட்டாது வீராவேசங்கொண்டு பொருதுமாய்ந்தமைகேட்டும்,

தன் கடைசிமைந்தனைத் தக்கபுத்திமதிசொல்லிப் போர்க்கனுப் பினள் என்பது பண்டைத் தமிழ்ச்செய்யுளொன்றால் அறியக்கிடக் கின்றது.

அங்ஙனம், பொருதுமாயாது, தோற்றுப் புறங்காட்டிவரும் மைந்தனைத் தாய்மார்கள் மிகவும் இகழ்வர். அவரால், அவர் குலத் துக்கே, குறைவுவருதல்பற்றிப் பெரிதும் மனம்வருந்துவர். சிற்சில சமயத்துத் தாம், இத்தகையமகனைப் பெற்றேமே என்னும்வருத்தத் தால், தம்முயிரினையும் மாய்த்துக்கொள்வர்.

> " மாய்பெருஞ் சிறப்பிற் சிறுவர் பெயரத்
> தாய்தப வரூஉந் தலைப்பெய னிலையும் "

என்று தொல்காப்பியர்கூறியதனால் இது பெறப்படும்.

தன்மகன் போரிற்புறங்காட்டினன் எனக்கேள்வியுற்ற ஒரு முதியோள், அது உண்மையாயின் அவனுக்குப் பாலூட்டிய என் முலையினை அறுத்திடுவேன் என்றுகூறிச் சமர்க்களஞ்சென்று, அங்கு, படுகாயம்பட்டு இறந்துகிடந்த தன்மகனைக்கண்டு அவனால் தன்குலத்துக்குக் குறைவுநேரவில்லை என்றுணர்ந்து மகிழ்ந்தனள் என்னும் கருத்தினில் ஒரு புறநானூற்றுச்செய்யுள் காணப்படுகின் றது. அது பின்வருமாறு :—

> "நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
> முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
> படையழிந்து மாறின னென்றுபலர் கூற
> மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
> முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
> கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
> செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
> படுமகன் கிடக்கை காணூஉ
> ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே "

இதனால் தமிழ்வீரர்களுடைய தாய்மார்களின்தன்மை கூறப் பட்டது.

இனிப் பாடாண்டிணையிலக்கணத்தால் பெறப்படுவன சிறிது கூறுவாம்.

'பாடாண்' என்பது பாடுதல் தொழிலையும், பாடப்படும் ஆண் மகனையுங் குறிக்காது, அவனது ஒழுகலாற்றினை, அன்மொழித் தொகையாய்நின்று குறிக்கும் என்பது நச்சினார்க்கினியர்கருத்து.

பாட்டுடைத்தலைவனது வீரம், கொடை, அன்பு முதலிய குணங்களைப் புலவன் பாராட்டிப்பாடுவதெல்லாம் இத்திணையின் பாற்படும். இதற்குக்கூறிய இலக்கணத்தாற் 'பிள்ளைத்தமிழ்' ஆற்றுப்படை முதலிய தமிழ்ப்பிரபந்தங்கள் எவ்வெச்சந்தர்ப்பத்திற் செய்யப்படவேண்டுமென்பது அறியலாகும்;

"குழவி மருங்கினும் கிழவ தாகும்"

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

என்ப திலக்கணமாதலான்.

ஏழ்திணையிலக்கணவாயிலால் உணரப்பட்டவை இவை. பின் 'பொதுவியல்' என்னும் போரால், இவ்வேழ்திணையினும் பொதுவாக வருவனவற்றையும், இவற்றுள் அடங்காதவற்றையும் தொல்காப்பியர் சொல்லியிருக்கிறார். அவற்றை இங்குச் சற்று ஆராய்வோம்.

போர்தொடங்குமுன்னரே, கொற்றவைக்குப் பலிகொடுத்துவந்தனர் அக்காலத்து அரசர்கள் என்பது,

"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும்"

என்னும் இலக்கணத்தானும்,

போரிடை வீரங்காட்டிப் பொருதுவீழ்ந்தவீரனுக்கு, மரியாதை செய்வதற்காக, 'நடுகல்' நாட்டி அதனைத் தெய்வம்போற் பாராட்டி வந்தனரென்பது,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தல்"

எனவரு மிலக்கணத்தானும் போதரும்.

கல்நடுதலின் விவரத்தை "கல்லினை நீர்ப்படுத்துத் தூய்மைசெய்தலும், அக்கல்லின்கண் மறவனை நடுதலும், அவன்செய்தபுகழைத்

தரும்படிபொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ்சிறப்புக்களைப்படைத்தலும்" என ஓரிடத்தும், "நடுதற்கண் மடையும், மலரும், மதுவும் முதலியனகொடுத்துப் பீலித்தொடையலும், மாலையும் நாற்றிப் பல்லியம் இயம்ப விழவுச்செய்யுஞ்சிறப்பெல்லாம் நடுதலாய் அடங்கும்; நாட்டப்படுங்கல்லிற்குக் கோயிலும், மதிலும் வாயிலும் ஏனைச்சிறப்புக்களும் படைத்தல் பகுதியாய் அடங்கும்" எனப் பிறிதோரிடத்தும் நச்சினார்க்கினியர் விரிவாகவுரைத்திருப்பதனால், அக்காலத்திற் போர்க்களத்தில் மிக்கதைரியத்துடன் பொருதுமாய்ந்தவர்கள் தெய்வமாகக்கருதப்பட்டனர் என்பதற்குச் சான்றாகும். இக்காலத்துத் தமிழ்நாட்டில் ஆங்காங்குக்காணப்படும் 'மதுரைவீரன்'கோயில் 'கருப்பண்ணன்'கோயில் முதலியன, இங்ஙனம் போர்வீரர்க்குக் கல்நாட்டியதன்காரணமாக் எழுந்தனவோ என்று ஐயுறுதற்கும் இடமுண்டு.

இன்னும், போர்செய்ததன்பயனாகப் பகைவரிடமிருந்து மிக்க பொருளினைக் கொள்ளைகொண்ட அரசர், அதனைத் தம்வீரர்க்கும் புலவர்க்கும் பங்கிட்டுக்கொடுப்பர் என்பதும், அவர்க்கு மிக்க ஊணும், மதுவும் கொடுத்து அவரை உற்சாகப்படுத்துவர் என்பதும், "பாதீடு" "உண்டாட்டு" "கொடை" என்னும் துறைகளின்பெயரமைப்பினாலே அறிந்துகொள்ளலாகும்.

மதுவுண்பது அக்காலத்துப் பெருவழக்காயிருந்தது என்பது, "தாங்கொண்ட மகிழ்ச்சியால், சுற்றத்தொடு கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடுதல்" என்று நச்சினார்க்கினியர்கூறுதலாலும், "தெளிகொண்ட, வெங்கள் மலிய விளிவதுகொல் வேற்றார்போல், செங்கண் மறவர் சினம்" என்னும் வெண்பாமாலைச்செய்யுளாலும், "தேட்கடுப்பன்ன நாட்படு தேறல்" எனப் பிறரும் கூறியிருப்பதனாலும், கம்பநாடரும், 'உண்டாட்டுப்படல'த்தில்,

> "பூக்கமழ் ஓதியர் போதுபோக்கிய
> சேக்கையின் பச்செருச் செருக்குஞ் சிந்தையார்
> ஆக்கிய அமிழ்தென வம்பொன் வள்ளத்து
> வாக்கிய பசுநறு மாந்தல் மேயினார்"

எனக்கூறி அக்கள்ளுண்டலின்மயக்கத்தால் நிகழ்ந்தவைகளை வருணித்துத் தொண்ணூறுகவிக்குமேற் பாடியிருப்பதாலும், சிறிதும் சந்தேகமின்றிக் கொள்ளக்கிடக்கின்றது.

இதுகாறும் தொல்காப்பியத்தில்விரித்துள்ள புறப்பொருளிலக்கணங் கருவியாகக்கொண்டு அறியப்பெற்றவை கூறினோம்.

இனித் தொல்காப்பியனார், உவமவியல், செய்யுளியல், மரபியல் இவற்றைப் பொருளதிகாரத்துட்சேர்த்ததனால், இவற்றைப்பற்றிச் சிலகூறி இவ்வாராய்ச்சியை முடித்துவிடுவோம்.

யாப்பினையும், அணியையும் பிற இலக்கணநூலார் பொருளின் வேறுபடுத்துக்கூறுவரெனினும், தொல்காப்பியனார் அவற்றைப் பொருளின்கணணேயே அமைத்தார்.

எல்லா அணிகளுக்குள்ளும் உவமையே சிறப்புடையதாகலானும், அவ்வுவமையடியாகவே, உற்றுநோக்கின், பிற அணிகள் பிறத்தலானும் உவமையொன்றினையே தொல்காப்பியனார்கூறினார். அதன்கண் அவர் 'உள்ளுறையுவமம்' என்பதன் இலக்கணங்கூறியுள்ளது புலவர்களாற் பாராட்டற்பாலது.

"எற்றவளை வரிசிலையோ னியம்பாமு னிகலரக்கி
சேல்தவளை தன்கணவன் அருகிருப்பச் சினந்திருகிச்
சூல்தவளை நீருழக்கும் துறைகெழுநீர் வளநாடா
மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனமென்றாள்"

என்று சூர்ப்பணகை இராமனிடத்தில், சீதையைத் தான் எடுத்துச் செல்லமுயன்றதற்குக் காரணம்கூறியவிடத்தில், இராமபிரானுக்குக் கம்பர்கொடுத்திருக்கும் அடைமொழியில் 'உள்ளுறையுவமம்' அமைத்திருப்பது ஈண்டுக் கவனித்தற்பாலது.

மற்றும் 'உவமை'யானது, சிறப்புடையதாயிருத்தல்வேண்டுமென்பதும், ஆசிரியர்கூறும் இலக்கணம். பூனைபோற்பாய்ந்தான் என்னாது புலிபோற்பாய்ந்தான் என்னல்வேண்டுமென்பர் நச்சினார்க்கினியர். இதற்குச்சூத்திரம், "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" என்பது. மற்றும், பொருளினை யுவமமாகமாற்றிக்கூறும் எதிர்நிலையணியும் ஆசிரியர்க்குடன்பாடு என்பது,

"பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும்"

என்னும் சூத்திரத்தாற்போதரும். "கண்போலம்பு, நுதல்போலும் கடுங்கார்முகமும்" என்பன இதற் குதாரணமாம்.

மரபியலின்கண்ணே, அக்காலத்துச்சொற்கள் இன்னவாறு வழக்காறுடையன என ஆசிரியர் கூறியிருக்கின்றனர். 'இது இக் காலத்து வீழ்ந்தது போலும்' எனப் பல இடங்களில் நச்சினார்க்கினியர்சொல்லும் உரையாலே, அக்காலத்திற்சொற்களிற்சில நச்சினார்க்கினியர்காலத்திலேயே வழக்கொழிந்தன என்பதுபோதரும்.

இக்காலத்தில்வழக்கற்றொழிந்தன இன்னும்பல ஆதல்வேண்டும். ஆதலால் அவ்வக்காலத்துக்கேற்ப, இன்னஇன்னசொற்கள் இன்ன பொருளில்வரவேண்டும்என இலக்கணம் அமைத்தல் முறை என்பது தொல்காப்பியனார்கருத்தாகின்றது.

இன்னும், இம்மரபியலுட்கூறியவற்றானே, ஓரறிவுயிர், ஈரறிவுயிர்முதலாக..........ஆறறிவுயிர் ஈறாகவுள்ளவற்றின் இலக்கணங் களும் பிறவும் அறியப்படுமெனினும் அவையெல்லாம் எடுத்தியம்பின் விஷயம் மிகவும்விரியும் ஆதலால் இதனோடு நிறுத்திக்கொண்டு, நச்சினார்க்கினியர் உரையின்கண்ணே குறித்துச்செல்லும் குறிப்புக் கள் தேசசரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படுமாறுகூறுவோம்.

இவ்வுரையாசிரியர், வஞ்சித்திணைச்சூத்திரவுரையில், "அது கருவூரிடைச் சேரமான் யானையெறிந்தாற்போல்வன" என்று கூறியதனாலும், "கடலகத்துப்பட்டுக் குமரியாறும் பனிநாட்டோடு கெடுவதற்குமுன்" என மரபியலின் "வினையினீங்கி" என்னும் சூத்திரவுரையிற்கூறிய தனாலும், "அது முதனூலாகிய அகத்தியம்போலும்; என்னை? அஃது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று மூன்று பிண்டத்தினையும் அடக்கிநிற்றலின்" எனச் செய்யுளியலில், "மூன்றுறுப்படக்கிய" என்னும் சூத்திரவுரையிற்கூறியதனாலும், முறையே, கருவூரில் சேரன்வெற்றிகொண்டதும், குமரியாறும் பனிநாடும் கடலாற் கொள்ளப்பட்டதும், அகத்தியம், முத்தமிழிலக்கணமுங் கூறியதோர்

நூல் என்பதும் அறியப்படும். இங்ஙனம் அவர் உரையிற்குறித் துளவற்றால் அறியப்படும் பிரசரித்திரவிஷயங்கள் பலவுள.

இதுகாறும் ஆராய்ந்தவாற்றால், தமிழிலக்கணத்துட்காணப்படும் பொருள், அகம் புறம் என்னும் இருவகைத்து, எனவும், அவற்றுள் அகப்பொருள் தலைவன் தலைவியர் உள்ளத்தேநிகழும் காமஇன்பத் தைக்கூறுவதென்றும், அதற்கு ஆசிரியர் வகுத்த இலக்கணத்தால், தமிழ்நாட்டில் காந்தர்வமணம் நடைபெற்றுவந்ததென்றும், வருணாச் ரமமுறை வழுவாதிருந்ததென்றும், ஆரியர்களே தமிழர்க்கு மண முறை ஏற்படுத்தினர் என்றும், தலைமகன் ஒன்றுக்குமேற்பட்டமக ளிரை மணந்துகொள்ளலாமென்றும், தலைவியை இன்னகாரணங்க ளாற் பிரிந்துசெல்லலாம் என்றும், அக்காலத்து வேசையர்செல்வாக்கு மிகுந்திருந்தது என்றும், அரசர்கள் வேற்றரசரோடு எவ்வெக்கார ணங்களாற் போர்தொடங்கினார்கள் என்றும், அவர்கள் வீரர்களி டத்து எங்ஙனம் பெருந்தன்மைபாராட்டினார்களென்றும், வீரன் போர்க்களத்துமாள, அவன்மனைவி இன்னவாறொழுகினள் என்றும், அவன்தாய் இன்னவாறு ஒழுகினள் என்றும், பிறவும் தொகுத்துக் காட்டப்பட்டன.

தொல்காப்பியம்:
பொருளதிகார ஆராய்ச்சி
முற்றுப்பெற்றது.

---

வே. முத்துஸாமி ஐயன்,
எம். ஏ; எல். டி.

ஸ்ரீ

# திருக்கோளூர்ச்சாசனங்கள்.

திருக்கோளூர், திருநெல்வேலிஜில்லா ஆழ்வார்திருநகரிக்குக் கிழக்கே ஒன்றரைமைல்தூரத்திலுள்ளது. திருவாய்மொழியில் இவ்வூர்க்கு ஒருபதிகம் உண்டு. தாம்ரபர்ணிநதீமகாத்மியத்தில் இவ்வூர் மஹாத்மியமும் கூறப்பட்டுளது. இதுதவிர, பிரமாண்டபுராண க்ஷேத்ரமஹாத்மியகாண்டத்து நவக்ஷேத்ரமஹாத்மியத்தில் இவ்வூர் ஸ்தலபுராணம் தனியாய் விளக்கப்பட்டிருக்கிறது. அதன்ஸாராம்சம், அஸாதாரண அலங்காரம்பூண்டிருந்த பார்வதியை ஒருநாள் இன்னாரென்று அறியாமல் ஸ்வபாவமாய் உற்றுநோக்கியகுபேரன், தன் செல்வமும் கண்ணும் இழக்கும்படி சபிக்கப்பட்டு, தன்செல்வத்தைத் திரும்பஅடையும்படி தாம்ரபர்ணியின் தென்கரையில் லக்ஷ்மீதீர்த்தத்தில் தபசுசெய்ய், இவ்வூர்ப் பெருமாள் திருவுளமுகந்து குபேரனுக்கு நவநிதியையும் கொடுத்தார், என்பதாம். இவ்வூரில் ஸ்வாமி சயனத்திருக்கோல்மாய்க் குபேரனுக்கு அளந்துகொடுத்தமரக்காலுடன் எழுந்தருளியிருக்கிறார். சுவாமியின்திருநாமம் வைத்தமாநிதி. (திருவாய் VI—7—11). முதல்ராஜராஜன் வட்டெழுத்துச்சாசனமொன்றில் இப்பெருமானை, 'திருக்கோளூர்ச்சலச[ய]னத்துக்கி[டந்?]தருளின எம்பெருமானர்க்கு' என்று குறித்துளது. திருக்கோளூர் என்பதற்கு லக்ஷ்மியாற்கொள்ளப்பட்டவூர் என்று பொருள் என்பர் தமிழர். 'என்னிளமான்புகுமூர்திருக்கோளூரே' என்பது திருவாய்மொழி. ஸம்ஸ்கிருதபௌராணிகர் கோள் என்பதற்குக் கோட்சொல்லுதல் எனப் பொருள்கொண்டு பிசுனக்ஷேத்ரம் என மொழிபெயர்த்தனர். குபேரனுடையநிதிகள் இவ்வூர்த் திருமாலிடம் ஒளிந்துகொண்டிருக்கின்றனவென்று 'அதர்மதேவதை' குபேரனிடம் கோட்சொன்னவிடம் பிசுனக்ஷேத்ரம் என ஸ்தலபுராணம் கூறுகிறது.

நம்மாழ்வாரின்சிஷ்யர் மதுரகவியாழ்வார் அவதாரமானஇடம் இது. இவ்வூரில் மேல்புறமெழுந்தருளியிருக்கிற சிவபெருமானுக்குச் 'சேரசோழபாண்டீச்வரர்' என்று பெயர். மும்மண்டலங்களையும் ஜயித்துச் 'சேரசோழபாண்டியன்' என்னும் பட்டம்வகித்த

700வருஷங்களுக்குமுன் இருந்த குலசேகரனுலோ சுந்தரபாண்டிய னுலோ இச்சிவபெருமான் பிரதிஷ்டைசெய்யப்பட்டிருக்கிறுரென்று தெரிகிறது. புதிதாய்க் கட்டவென்று, சாசனம் பொறித்துள்ள உள்மதிள் இடித்துவிழ்த்தப்பட்டிருக்கிறபடியால், உண்மைகண் டறியமுடியவில்லை. இவ்வூர் முன்காலத்தில் ஒரு பெரிய வ்யாபார ஸ்தலமாயும் பெரியபட்டினமாயு மிருந்ததாகத்தெரிகிறது. மேற் சொன்ன முதலிராஜராஜன் வட்டெழுத்துச்சாசனத்தில் 'இவ்வூர் இ(லை?)ந்தாவணியூர் மா—யரா(?)வி(—)தரபுரத்து வியாபாரி சோலை கணபதிஆன அலங்காரசெட்டிவைச்ச ஆடு (நடு)' என்பதை நோக்குக. மலைநாட்டில் திருமூழிக்களத்திலிருந்து (இவ்வூர் இப்போது கிராம மாயிருந்தபோதிலும் இவ்வூர் அளவுகருவிகளே மலைமண்டலமுழுதும் படிமாற்ருக உபயோகிக்கப்பட்டுவந்தன என்று மலைநாட்டுச்சாசனங் களால் தெரிகிறது) வியாபாரநோக்கமாய்(?)இங்குவந்தஒருவன் ஒரு தர்மம்செய்திருக்கிறுன் என்பது பின்வரும் III சாசனத்தால்விளங் கும். சுமார் 10வருஷங்களுக்குமுன், தொன்மைஆராய்ச்சி இலாகா சூப்பரின்டெண்டு 'ரே' துரையவர்கள் இவ்வூர்க்குவந்து பூமியை வெட்டிப் பரிசோதித்துப்பார்த்துப் பழையநாணயங்கள், சிலநாகரீகச் சின்னங்கள் முதலியவைகளை யெடுத்துச்சென்றுர். பழைய புத்த சமணப் படிமைகளிரண்டொன்று காணப்படுகின்றன. நவலிங்கபுர சிவக்ஷேத்ரம் இவ்வூர்ப்பக்கத்திலிருந்தது. இச் சிவக்ஷேத்ரம் தாம்ர பர்ணீபுராணத்திலும் திருநெல்வேலித்தலபுராணத்திலும் பிரஸ்தா பிக்கப்பட்டிருக்கிறது.

## சாசனம் I

## சுவாமி வைத்தமாநிதியின் கர்ப்பக்ரஹம் தென்புறம் மேலோரத்து உச்சிப்பக்கம்.

காலம் :—கோநேரின்மைகொண்டானது (சுந்தரபாண்டியன்?)

விஷயம் :—தன் பிறந்தநாளில் உத்ஸவம் ஏற்படுத்தினது.

1. திரிபுவனசக்ரவர்த்திகள் கோநேரிமேல்கொண்டான் (கோ நேரின்மைகொண்டான்) திருவழுதிவளநாட்டு திருக்கோளூர் பள்ளி கொண்டருளிய

2. பரமசுவாமிகள்கோயிலில் ஸ்ரீவைஷ்ணவர்க்கும் நம்புசெய் வாநுக்கும் (= பூஜைசெய்பவனுக்கும்) இப்பரமஸ்வாமிகள் இருபதாவதி எ

3. திரா மாண்டி னெதிராமாண்டுமுதல் பங்கூனிமாசத்திலே திருநாளெழுந்தருளி நாம்பிறந்தநாள்

4. அவிடத்திலே ஸ்ரீ ஜயந்தீ ஸநாதித்தருளத் திருப்படிமாற்றுள்ளிட்டு வேண்டுநியன்தங்களுக்கு இப்பரமஸ்வாமிகளுக்கு

5. காராண்மை உட்பட்ட தேவதானம் இறையிலியான அமுதகுணவளநாட்டு வல்லக்குளம் அடுக்களை ப்ர(ா)ஹ்மணரில் 'நாலூர் சீராமதேவன்பெரியநம்பிப்பின் (=தம்பி) குலசேகரப்ரஹ்மாதிராயனுக்கு காராண்மை

(இத்துடன் குறை)

குறிப்பு :—பாஞ்சராத்ரமுதலிய ஆகமங்களில், கோவில்களின் த்வஜாரோஹணம், ரதோத்ஸவம், ஆருட்டு இவைகளுக்கு, வர்த்தமானராஜாவின் பிறந்தநாள்நக்ஷத்திரத்தையும், உரியதினமாகக் கொள்ளலாமென்றுகூறியிருப்பது, இங்கு அறியத்தக்கது.

## சாசனம் II

## ஷை ஸந்நிதி கர்ப்பக்ரஹம் அர்த்தமண்டபத்தின் தென்புறம் தென்வடல் பட்டியல்.

———(:o:)———

காலம் :—ஸ்ரீவல்லபதேவபாண்டியன் பட்டாபிஷேக வருஷம்.

விஷயம் :—ஸ்வாமி வைத்தமாநிதிகோயிலிலுள்ள காளிங்கமர்த்தனக்கண்ணுக்கு ஸ்ரீஜயந்திஉத்ஸவம் நடத்துவதற்கு மூலதனம் ஏற்படுத்தினது.

1. ஸ்வ ஸ்தி ஸ்ரீ (சீர்மெய்க்கீர்த்தி) திருமடந்தையுஞ் ஜயமடந்தையும் திருப்புயங்களில் இனிதிருப்ப, இருநிலமும் பெருமை எய்த எண்டிசையுங் குடைநிழற்ற, மன்னவரெல்லாம் வந்திறைஞ்ச மரபிலேவரு முடிசூடத், தென்குமரியும் வடகெங்கையும் திரைக்கடலெ

எல்லையி — + முழுது + க + ளைபரந்து, செங்கோலுடன் வளர் மன்னவர் ஸிம்ஹாஸ + + (உரைநடை) உலகமுழுதுமுடையா ரொடும் திரு

2. க்குலம்விளக்கிய கோமுதற்கோச்சடையபற்மரான் த்ரிபுவன சக்ரவத்திகள் ஸ்ரீவல்லபதேவற்கு யாண்டு க-வது ஸ்ரீபாண்டிமண்டலத்து திருவழுதிவளநாட்டு திருக்கோளூர் ஊராயிசைந்தஊரோம் இவ்வூர் திருக்கோளூர்எம்பெருமான்கோயிலில் காளி(ஸ)மர்த்தந ஆழ்வார்க்கு ஆவணிஜெயந்திதிருநாளுக்கும் ஆனிமாசம் எழுந்தருளும் (தீர் ?)

[இத்துடன்குறை]

குறிப்பு :—இந்த ஸ்ரீவல்லபபாண்டியனின் க-வது வருஷத்திற்கு மேற்பட்ட்சாசனங்கள்கிடைக்காததால், இவன் பட்டத்துக்குவந்த வருஷத்திலேயே, யுத்தத்திலோ ஸ்வபாவமாயோ இறந்திருக்க வேண்டுமென்றுதோன்றுகிறது. 'கோமுதல்' என்பதனுல் இவன் மூத்தபிள்ளை என ஊகிக்கப்படுகிறது.

ஷை மேற்கோரம் கோணப்பட்டியல் மேல்தட்டையில் ஸ்வஸ்தி ஸ்ரீ என்று மாத்திரம் இருக்கிறது.

---

## சாசனம் III

### ஷை கர்ப்பக்ரஹம் தென்புறம் மேற்கோரம் கோணப்பட்டியல் மேல்பாகம்.

———(:o:)———

காலம் :—ஜடாவர்மன் குலசேகரதேவற்கு யாண்டு ௰௫-ஆவது.

விஷயம் :—மலையாளத்திலுள்ள திருமுழிக்களத்துத் தேவன் கோட்டத்துவர்ஸ-தேவன் என்பவன் இவ்வூர்ஸ்மாமியின் திருநந்தா விளக்கொன்றினுக்கு மூலதனமாக யானைமுத்திரையுள்ள பொற்காசு ஒன்று கோயில்வேலைக்காரரிடம் கொடுத்தது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடையபன்மரான த்ரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலசேகரதே

2. வற்கு யாண்டு௰௫-ஆவது தைய்மாஸத்து திருவழுதிவள நாட்டு திருக்கோளூர் ப

3. ள்ளிகொண்டருளின எம்பெருமானுக்கு ஸ்ரீமலைமண்டலத் துத் திருமூழிக்களத்து

4. த்தேவன்கோட்டத்துக் கோவிந்தன் வாஸுதேவன் இவெம் பெருமானுக்கு ஒரு

5. க்கின ஆனை அச்சு ஒன்று. இவ்வச்சு ஒன்றுக்கும் ஒரு ஸந்தியாதீப சஞூர்த்தித்தவற்செ

6. ல்வதாக ஒருக்குசதக் (?) கொண்டேம் இவ்வெம்பெரு மான் கன்மிகளோம் இஸந்

7. (நேர்பட்டியல்) தியாதீப முட்டாமேசெலுத்துவோமாக வும். இது இவ்வெம்பெருமான் ஸ்ரீ பாதமேய் மு

8. ட்டாமேய் செலுத்துவோமாகக் கைக்கொண்டோ(ம்) இவ் வெம்பெருமா(ன்)கன்மிகளோம் இது ஸ்ரீவை

9. ஷ்ணவ இரக்ஷை.

---

## சாசனம் IV

### ஷை ஷை மத்தியபாகம்.

—:o:—

காலம் :—ஜடாவர்மன் குலசேகரதேவற்கு யாண்டு௰௫ஆவது.

விஷயம் :—இவ்வூர் ஸ்வாமியின் ஸந்தியாதீபமொன்றினுக்கு, இருங்கண்டி பிச்சாண்டான்மனைவி திருமலைநாடி என்னும் பிராமண விதவை, வேலைக்காரரிடம் ஒருபொற்காசு மூலதனமாகக்கொடுத்தது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனசக்கரவத்தி கள் ஸ்ரீகுலசே

2. கரதேவற்குயாண்டு௰௫ஆவது திருவழுதிவளநாட்டு திருக் கோளூர் எம்பெரு

3. மானுக்கு ஸந்திய(ா)தீபத்துக்கு இத்திருபதியில் இருங் கண்டிபிச்சாண்டான் ஸ்ரீராம

4. ணி திருமலைநாடி சந்தியாதீப முட்டாமற்செல்கைக்கு ஒருக்கின அச்சு க. இவ்வச்

5. சொன்றுக்கும் நித்தம் ஒருஸந்தியாதீபம் செல்வதாக்கிக் கொண்டோம் இவ்

6. வெம்பெருமான்கன்மிகளோம். இதுஸ்ரீவைஷ்ணவஇரக்ஷை.

---

## சாசனம் V

## ஷைக்குக் கீழ்புறம் கீழ்பாகம்.

——:(o):——

காலம் :—ஷை

விஷயம் :—ஸந்தியாதீபமொன்றினுக்கு ஆளவந்திஎன்பவள் ஒரு பொற்காசுகொடுத்தது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவன சக்கரவர்த் திகள் ஸ்ரீகுலசேகரதே

2. வற்கு யாண்டுமெ௩ஆவது திருவழுதிவளநாட்டு திருக்கோ ளூர் எம்பெருமா

3. னுக்கு ஸந்தியாதீபத்துக்கு இத்திருபதியில் விருக்குங் கு — வ — யான்(?)தாய்

4. ஆளவந்தி ஸந்தியாதீபத்துக்கு இட்ட அச்சொன்று. இவ் வச்சொன்றுக்கு

5. சந்திரா தித்தவற்செலவுதாக. இதுஸ்ரீவைஷ்ணவ இரக்ஷை.

——(:o:)——

(தொடரும்.)

A. M. சடகோபராமாநுஜாசார்யன்,

திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீ

# "திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகை."

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற் சிறந்த மெய்யடியார்களென்று கொண்டாடப்படுகிற ஆழ்வார்கள் பன்னிருவரா லருளிச்செய்யப்பட்டுத் தமிழ்வேதமெனவழங்கப்பெற்றுவருகின்ற திவ்யப்ரபந்தங்கள், ஸ்ரீமந் நாதமுனிகள்முதலிய பூருவாசாரியர்களின் திருவுள்ளக் கருத்துக்கிணங்கத் திருக்குருகைப்பிரான்பிள்ளான், வடக்குத்திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை முதலிய ஆசிரியர்களால் வடமொழி தென்மொழிவிரவிய மணிப்பிரவாளநடையில் மிகவிரிவாக வியாக்கியானிக்கப்பட்டுத் தமிழ்லிபியிலும் தெலுங்குலிபியிலும் நெடுநாளைக்குமுன்னமே அச்சிடப்பட்டிருக்கின்றமையை ஈண்டு அறியாதார் மிகச் சிறுபான்மையரேயாவர். அத் திவ்வியப்பிரபந்தங்கட்கு எளியநடையில் தமிழுரை ஒன்றும் இன்றுகாறும் வெளிவரவில்லையென்பதும் அநேகரால் அறியப்பெற்றதாகும். பலநூற்றுண்டுகட்குமுன்னர்ச் சுருங்கிய பலஉரைகள் பிறந்திருந்தனவாகப் பூருவாசாரியர்களின் வியாக்கியானங்கள் புலப்படுத்துகின்றன ; ஆயினும் அவை நெடுநாளைக்குமுன்னரே லுப்தங்களாயினவென்று பலர் கூறுப. இதுநிற்க.

ஷை திவ்யப்பிரபந்தங்கட்கு, 'திவ்யப்ரபந்ததிவ்யார்த்ததீபிகை' என்னும் பெயரால் ஒரு தமிழுரை, காஞ்சீபுரம் பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வெ. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளால் எழுதப்பட்டு, சென்னைப் பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்திற் சிலகாலமாகப் பதிப்பித்துப் பிரசுரஞ்செய்யப்பட்டுவருகின்றது. இவ்வுரையாசிரியர் மிக்க இளமைப்பருவம் பொருந்தியவராயினும் வடமொழியிலும் தென்மொழியிலும் தெளிந்தஞானம்பெற்றுச் சாஸ்திரஸம்ப்ரதாயங்களையும் களங்கமறக் கற்று உபந்யாஸவகையிலும் தேர்ச்சிபெற்றுள்ளாரென்பதை யாம் ஆராய்ந்துணர்ந்துளோம். அன்றியும் இவர் தம்முடையபுலமையினுற் பலரும் பயன்பெறுமாறு பலநூல்களையெழுதி வெளியிட்டுவருகின்றார். ஸம்ஸ்கிருதபாஷையிலும் திராவிடபாஷையிலும் வியாக்யானங்கள் உபந்யாஸங்கள் முதலியவையெழுதுவதில் இவர் மிக்கவல்லமைபெற்றிருக்கின்றாரென்பது இவர் வெளியிடும் கிரந்தங்களால் வெளியாகின்றது.

ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்கு இவரால் எழுதி அச்சிடுவிக்கப்பட்டுவருகின்ற 'திவ்யப்பிரபந்ததிவ்யார்த்ததீபிகை'யென்னும் தமிழுரையைநோக்குங்கால் இவர் செந்தமிழ்ச்செல்வர் என்னும் சிறப்புப்பெயர்பெறுதற்குரியரென்பது தெற்றெனவிளங்கும். அவ்வுரையில் பிரதிபதார்த்தம், தாத்பரியார்த்தம், விசேஷார்த்தம், ஸ்வாபதேசார்த்தம், இலக்கணக்குறிப்பு முதலியவை மிகவும் எளியதாயுந் தெளிவாயுமுள்ள நடையில் எழுதப்படுகின்றவளவேயன்றி, காலகதியிற் பலவகைகளால் மாறுபட்டிருக்கின்ற சில மூலபாடங்களும் உசிதமானவகையில் திருத்தியு முரைக்கப்படுகின்றன.

மிக்க ஆராய்ச்சியுடன் எழுதப்படுகின்ற இவ்வுரை ஸம்ஸ்கிருதத்தில் மிகப்பயிற்சியில்லாததமிழர்களும் பொருளுணருமா றெழுதப்பட்டிருத்தலால் ஆத்திகர் அனைவர்க்கும் ஆவச்யகமேயாம்.

இவ்வுரை, ராயல் 8 பேஜ்ளைஸ் 6 பாரங்களமைந்த சஞ்சிகையாக உயர்ந்தகிளேஸ்பேபரில் மாதந்தோறும் அச்சிட்டு வெளியிடப்பட்டுவருகின்றது. இன்றளவும் வெளிவந்துள்ளஸஞ்சிகைகள் 10. இவற்றுள், பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு, பெரியாழ்வார்திருமொழி என்ற இரண்டு திவ்யப்பிரபந்தங்கட்குமாத்திரம் பூர்ணமாக உரை வெளிவந்திருக்கின்றது.

இதற்கு வருஷச்சந்தா (தபால்செலவுஉட்பட) 3-7-0 ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பிரத்தியேகஸஞ்சிகையின்கிரயம் 0-4-0. இது கிடைக்குமிடம் "மானேஜர்—பிரஸிடென்ஸிப்ரெஸ், 8, பிலிப்ஸ் தெரு—மதராஸ்."

பத்திராதிபர்.

---

௨

# தமிழ்நூல்களும் தமிழகமும்*

இந்த வியாசமுழுவதிலும் 'தமிழர்' என்றபதம், தெக்ஷிண இந்தியாவிலும், பிறநாடுகளிலும் வசிக்கும் தமிழ் அல்லது அதன் கிளைப்பாஷைகளைப் பேசுவோருக்குப் பொதுப்படையாக உபயோகிக்கப்படும்.

---

* இஃது எம். ஏ. பரீக்ஷைக்கு ஆங்கிலத்தில் மிஸ்டர் S. S. பாரதியார் M.A., B.L. அவர்களால் எழுதப்பட்டது. தமிழர்க்குப் பெரிதும் பயன்றரத் தக்கதென்றுகருதி மொழிபெயர்க்கப்பட்டது.

தமிழ் என்றமொழி சிறியதாயும் வசனிக்கக்கூடியதாயும், கம்பீரமுடையதாயுமிருப்பதால் டாக்டர் ஹாட்க்ஸன், மிஸ்டர் ரெனல்டு ரோஸ்டு போன்ற ஆங்கிலேயமேதாவிகளாலும் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றது. தமிழ்ப்பாஷை அதிபுராதனமானதும், பொருட் பொலிவுடையதும், மிகச் சிறப்பினையுடையதுமா(1) யிருத்தலோடு, செய்யுள் நடையிற் கிரேக்கபாஷையைக்காட்டிலும் உயர்ந்ததாயும், பொருளைச் செவ்வனேதெரிக்கக்கூடியதாயும், (உரோமபாஷையான) லத்தினைவிட அளவிறந்ததாய்(2) மிருக்கின்றமையின், இதுகாறும் துரானியம் அல்லது திராவிடம் என்று கூறிவந்த பெயரைவிடத் தமிழென்பது பொருத்தமானதாகும்.

இக்காலத்து மானிடவிகற்ப சாஸ்திரிகளின் (Ethnologist) கூற்றுப்படி துரானியவகுப்பினரோடு தமிழர்கள் யாதொருவகையினுஞ் சம்பந்தமுடையராகத் தோற்றவில்லையாகையால் தமிழரைத் துரானியரென்றுகூறுதல் ஆக்ஷேபமுடைத்தாம்; குணதிசைக்கிரேக்கர்கள், ஸ்காட்லாந்தர்(3) என்று கூறும்படி புராதனகாலத்திலேயே தமிழர் நாகரீகமுடையராயிருந்ததாலும், இதேமாதிரி ஸம்ஸ்கிருத புராண இதிகாசங்களிற் கூறப்பட்டிருத்தலாலும், மத்தியஇந்தியாவிலின்னும் கண்டுபிடியாத அநாகரிகர்களைச்சொல்ல ஸம்ஸ்கிருதபாஷாவிற்பன்னர்களா லுபயோகிக்கப்பட்ட பதமாகையாலும், இவர்களைத் திராவிடரென்பதும் பொருந்தாக்கூற்றாம்.

டாக்டர் ஆபர்ட்டென்பார் (Opert) 'பரதர்' என்ற பெயரையுபயோகித்த லுசிதமாமென்பர்; ஆயினும் இப்பெயர் ஒருவாறனும் இதுபொழுது வழங்காததாதலின் ஏற்காததொன்றாம்.

மிஸ்டர் கனகசபைப்பிள்ளை கங்காநதியின் சமுத்திரசங்கமத்துள்ள ஒருகாலத்துச் சிறந்துவிளங்கி இப்பொழுது தாமலூக் என்று கூறப்படும் தாமிரிலிப்பட்டியென்னும் வடமொழிப்பெயரையுடைய தாமிலிட்டி என்ற பெயரினின்றும் தமிழ், தமிழர் ஏன்பது வந்த

(1) கால்டுவெல்பாதிரியாரது கம்பாரிடிவ் திராவிடியன் இலக்கணம்.

(2) உவின்ஸ்லோ எழுதிய அகராதிமுகவுரை.

(3) ஸ்காட்லாண்டு இங்கிலாந்துக்கு வடக்கிலுள்ளது. இங்கிலாந்து ஸ்காட்லாந்து இரண்டுஞ்சேர்ந்தே ஒரு தீவாயினும் தேசத்து அதிபூர்வகுடிகள் ஸ்காட்லாந்தியரே.

தென்றுகூறுவதற்கு ஆதாரம்வேண்டுமாயினும் அவரது தமிழர் என்னும் கூற்றுப் பொருத்தமுடையதொன்றேயாம்.

தமிழர்களது பூர்வீகஸ்தானம் எவ்விட மென்பதைப்பற்றி யநேகவிதம் கூறுவதுண்டெனினும், அவற்றுள் நான்கே குறித்தற் குரியவாம்.

முதலாவது டாக்டர் கால்டுவெல்பாதிரியாரால் வெகுசாமர்த் தியமாகப்பேசப்பட்ட சித்தியன்கோள்கைக்குப் பாஷாந்தர ஆதார மாவது மானிடவர்க்க சாஸ்திரஆதாரமாவது ஒன்றுமில்லை. மேன் மைதங்கிய மேற்றிராணியார் (Bishop) சித்திய தமிழ்ப்பாஷைகளின் இலக்கணங்களையும், வார்த்தைகளையும் மாத்திரமேபார்த்துவிட்டு, இருவரும் ஒற்றுமையுடையோரென்று கூறிவிட்டனர். வடமேற் குக்கணவாய்வழிவந்த அநாரியக்குடிகட்குப் புராதன ஸ்தலம், ஆரியர்களைப்போன்று மத்தியஆசியாவே யென்பதும், இந்தியாவில் ஆரியர்பிரவேசித்தகாலத்து, அவர்களாற் றெற்கே அநாரியர் துரத் தப்பட்டனரென்பதும், மேல்நாட்டாருள் முதன்முதலாக வேறுபட்ட வபிப்பிராயமாகையால், அதற்குப் பரிந்துபேசுவோ ரநேகருளர். இப்பாற்செய்தவாராய்ச்சிகளால் மானிடதேகக்கூறுபாடுகளில் அதிக வேற்றுமையுளதென்பதும், முக்கியமாகத் தமிழர் காக்கேசியவகுப்பு அல்லது இந்துஐரோப்பியவகுப்பினைப் பின்பற்றியோராவரென்பதும் வெளியாகிறது4. மிஸ்டர் ரெனுல்டு ரோஸ்டு மிஸ்டர் மெக்லீன் எழுதியதைக்குறிப்பிட்டுத் தமிழர்களைத் துரானியசித்தியரென்பது தற்காலத்தில் மானிடவர்க்கசாஸ்திரஞர்களாற் போற்றப்படாத தொன்றா மென்கின்றனர். பிரபொஸர் ஹூலியன்வின்ஸோம் இந்தக் கோட்பாட்டைக் "குற்றமுடையதென்றும் ஏற்காததென்றும்" கண் டிக்கின்றனர். கம்பாரடிவ் திராவிடஇலக்கண வாசிரியராற் சொல் லப்பட்டதிராவிடபதங்களை மிஸ்டர் C. E. கோவரென்பார் சீர்தூக்கி யாராய்ந்து, 'பிக் என்பவரால் 'இந்தோ ஜர்மனேக்கன் கிரண்டஸ் பிராக்' என்னுங்கிரந்தத்திற் காட்டியபடி அவை ஸம்ஸ்கிருதத்தி னின்றுமுண்டாயவையென்றும், தமிழர், துரானியக்கூட்டத்தி

4 கல்கத்தாவில் பிரசுரமாகும் மாடர்ன்ரிவியூ' என்ற பத்திரிகையின் 1912ஞ ஜூலைப்பகுதியில் B. C. மசும்த்ரா என்பவர் திராவிடர்களைப்பற்றி எழுதியுள்ளார். அது பின்னர்த் தனிப்பட எழுதப்படும்.

னின்றும் நீக்கப்படவேண்டிய பெருமையுடையோரென்றும் கூறு கின்றனர்; துரானியருக்கு இலக்கண விலக்கியங்களாவது சரித்தி ரமாவ தில்லையென்று மிஸ்டர் பாரர் கூறுவதை யொப்பிடுமிடத்து இதனுண்மைதெள்ளிதாம்; தமிழரோ கோட்டை கொத்தளங்களுடை யராயும், இராஜரீகத்திற் கட்டுப்பாட்டினையுடையராயும், தேவாரா தனத்திற்குப் பெருங்கோயில்க ளெடுப்பித்தோராயும், வியவசாய மறிந்தவராயும், வானசாஸ்திரப்பிரமுகர்களாயும், உலோகவகைத் தொழிலிற் சிறந்தோராயும், நெய்தல், சாயமிடுதல் தெரிந்தோராயு மிருந்ததுடன், நயம், தொனி, சுருங்கச்சொல்லல், முதலியனவோடு பக்தியையும் நீதியையும் புகட்டக்கூடிய பாமாலைகள்நிறைந்த, நூல் களையுடையராயு மிருக்கின்றனர்.

இரண்டாவது மிஸ்டர் பெர்குஸன், சர் உவில்லியம் உவில்ஸன் ஹண்டர், மிஸ்டர் மார்ஷ்மான் முதலியோர்களாற் பெறப்பட்டதா யும், மிஸ்டர் கனகசபைப்பிள்ளையாற் பெரிதும் வியக்கப்பட்டதாயு முள்ள மங்கோலிய திபேத்தியக் கொள்கை ஆராய்ச்சிக்குரியதொன் றும். இக்கொள்கையும் மானிடவர்க்கசாஸ்திரத்தாலும், பாஷாந்தரத் தாலும் கண்டிக்கப்படுகிறது. தமிழரிடத்து மங்கோலியரது நிறம் குறிகள் காணப்படுவது அவர்கள் வங்கதேசத்திற் குடியேறியிருப்ப தாலாம்; இவர்கள் தங்கள்தங்க ணாடுகளினின்றும் இமயமலையின் வடகீழ்ச்சாரல்வழியாய்ப்புகுந்து, தாமரிலிப்பட்டித்துறைமூலமாகச் சமுத்திரத்தைத்தாண்டித் தென்னாட்டிற்புகுந்ததால் இவர்களது சப்பைமூக்கைக்கொண்டு யக்ஷர்களாமென்று சந்தேகிப்பது பொருந் தாது. நமது தமிழர், காக்கேசியரைப்போன்ற நிறம் குறி, குணமுடை யாரென்று வர்த்தமானகாலத்து மானிடவர்க்கநூனிபுணர்கள் காட்டு கின்றனர். தமது இந்துதேசசரித்திரத்தில், மிஸ்டர் மார்ஷ்மான், இந் தியருக்குச் சீனர்செய்த உதவியை யெடுத்துக்காட்டியிருக்கிறார். இந் தியசிற்பவித்தையை நன்றாயறிந்த மிஸ்டர் பெர்குஸன் நேபாளத்தி லுள்ள மேவார் என்ற ஜாதியினருக்கும் மலையாளத்துள்ள நாயருக்கும் ஏற்பட்ட சிற்பஜாதித்தொழிலொற்றுமையை யெடுத்துக்காட்டுவாரா யினும், அதனின்றும் மானிடசம்பந்தமுடையாரென்றுகூறவில்லை. சர் உவில்லியம்ஹண்டர் திபேத்தபர்மீயரைப்பற்றிப் பேசும்போது மங் கோலியர், சீனர்களது பூர்வீகர்களோடு மத்தியஆசியாவில் உடனிருந்

தோரென்கின்றனர். பாஷாந்தர ஒற்றுமையோ காலற்றதாகவிருக்கிறது. ழ. ஞ. ங. என்றஅக்கரங்கள் தமிழ், திபேத்த மங்கோலிய பாஷைகளிலிருப்பதும், தமிழ், தமிழிட்டி என்ற சப்தஒற்றுமையும், கோளத்தில் வானவர்என்பதும் சீனத்தில் ஸெலெஸ்டியல்ஸ் என்பதுபோன்றதுங்கொண்டு தமிழருக்கும் திபேத்தமங்கோலியருக்கும் ஒற்றுமைக்காதாரம்காட்டப்படுகிறது. ழ என்ற அக்ஷரத்தைக்கொண்டு வேறு புராதனங்கூறுவதென்றால் Z என்று ஆங்கிலேயர் கூறுவதற்கு எவ்விடஞ்செல்வதோ? ஞ, ஙக்கள் ஸம்ஸ்கிருதத்திலுமிருக்கின்றன. அதுகொண்டு ஆரியமும் மங்கோலியமும் ஒற்றுமையுடையதொன்றென்றுசொல்வாரைக் காணேமே! ஒலி ஒற்றுமைவிஷயத்திலோவெனின், அவ்விதம் சப்தாநுகுணமான பதப்பிரயோகங்களை யெண்ணுவதுஅநுசிதமாம். பூர்வகாலத்துச்சேரவரசர்களுள், தமிழாசிரியர்களாகப் பேர்பெற்ற பல்லோரரசருளரென்பது பலரும் நன்கறிந்ததே; அங்ஙனமாகஅவர்கள்பாடல்களி லொன்றினும் இதுபோன்று பயின்றுவாராமை குறிப்பிடத்தக்கதொன்றும். அநேகாப்தங்களாக, மாதுருத்தாயமுடைய நாயர்சாதியினரோடு தமிழர் கூட்டுறவாடினும் அவர்களது பழக்கவழக்கங்கள் இவர்கள்மாட்டுக் காணப்படாததேனோ? இதுகொண்டு நாயர்சாதியினர் எத்தேசத்தினின்றோ மேற்குக்கரையோரம் வந்த குடியோடிகளென்பதும், அவர்கட்கும் தமிழகத்துக்குடிமக்கட்கும் சம்பந்தமொன்றுமின்றென்பதும் போதரும்.

மூன்றாவது, "ஆரியரும் தமிழரும் கலப்பு" என்ற தலைக்குறியுடையதாகச் செவ்வனேநடத்தப்படும் சித்தாந்ததீபிகையின் வெளிவந்த எலாம்ஜாதியினர் என்றகொள்கையாம். இதன்பிரகாரம் எலாம்ஜாதியினர் இருபிரிவினராக ஒருவர் பாரசீகக்குடாக்கடல்வழியாக நேரே கப்பல்மார்க்கமாக மேற்குக்கரையிற்சேர்ந்தனரென்பதும், மற்றொருவகுப்பினர் தரைவழியாக(அப்கானிஸ்தானத்துப்பக்கத்துள்ள) போலன்பாஸ்வழியாகவந்து வடஇந்தியாவிற் றங்கினரென்பதுமாம். இக்கொள்கையானது புராணகதைகளைப்பற்றி யுண்டாயதாம். பூர்வம் பிரளயம் ஒன்று தோன்றிற்றென்பதும், அதனிற் கடவுள் தோணியொன்றுநிர்மித் த்தனில்மிதந்தனரென்பதும்,இந்தியருக்கும் ஏலத்தாருக்குமுள்ள பொதுக்கொள்கையாகும்; ஏலத்தாருக்கும் அச் சாதியருக்குமுள்ள வார்த்தையொற்றுமையும், மேருமலையின்

கண்ணுள்ள ஏலவிருத்தம் என்னும் வடமொழிப்பதத்தோடு கிறிஸ்தவர் விவிலியநூலில் எல்மண்டு என்றிருப்பதைக்கொண்டது. அதன்படி மநு சாலடியவரசரென்றும், பரதர்கள் ஏல்க் குறுநிலமன்னரென்றுங் கூறுகிறது. இதன்படி ஆரியர், தமிழர் அல்லது ஏலத்தாரது பின்னோராம். அவர்களது நாகரீக பழக்கவழக்கங்கள் தமிழரின் முற்போக்கேயாம்! இவைகளெல்லாம் கிறிஸ்தவரது உண்மைத் தேசாபிமானத்தின் வளர்ச்சியே யென்பது தெள்ளிதாம். இவைகட்கு இயற்றமிழ்ப்பகுதியில் ஏது யாதுங் காண்கிலம். முடிவாகத் தமிழர் மத்தியஆசியாவினின்றுந்தோன்றியவரென்று கூறுங்கூற்றை யொருவிதமாகத் திருத்திச்சொல்லித்தமிழர் மெஸபோடோமியாவை பூர்வஸ்தானமாகவுடையவரென்பதாம். இதற்கநுகுணமாக நண்பர் V. J. தம்பிப்பிள்ளையவர்கள் வெளிவந்து, தமிழர் எகிப்தியர்முதலியோரது சிற்பக்கலைக ளொருமாதிரியுடையனவேயென்றும், மதுரையிலுள்ள சிவாலயமும், எகிப்து ஜெருசலத்துள்ளகோவில்களும் ஒரேமாதிரியுடையனவென்றும், இவைகள் எகிப்திலு மிந்தியாவிலுந் தோன்றிய சந்திர சூரியவம்சத்தார்களது ஏற்பாடென்றும், நினேவாவின் ஆலயத்தும், தெக்ஷிணஇந்தியாவிலுள்ள ஆலயங்களிலும் காராம்பசு (நந்தி) காணப்படுகிறதென்றும், சிவபெருமானே சால்தியருடைய ஜாவேஎன்பதுதானென்றும் முட்டுக்கொடுக்கிறார், இம்முட்டுக்கள் பிளந்தவைகளாகலானும், இந்த முழுக்கொள்கையும் ஆதாரமற்று, இதுவாயிருக்கலாம் அதுவாயிருக்கலாம் என்ற சந்தேக ஒற்றுமைகளைக்கொண்டு நிர்மாணித்திருப்பதாகலானும் ஏற்காத தொன்றும்.

நான்காவது 'சென்னைஇராசதானியின்நிர்வாகம்' என்றபுத்தகத்தில் மிஸ்டர் மக்லீன் எழுதியதை யாதாரமாகவைத்துக்கொண்டு மிஸ்டர் குரூக்ஸ் (Crooks), மிஸ்டர் கீன் (Keane), மிஸ்டர் மாரிஸ் (Morris) போன்றோர் தமிழர் இந்துஆபிரிக்கவம்சத்தினரேன்பதொன்றுகும். அவர் தமதுபுத்தகத்தில் "தமிழர் இந்தியாவுக்குப் புறம்பாயுள்ளநாட்டினின்றும் குடியேறியிருப்பார்களானால் தெக்ஷிணம் அல்லது கீழ்புறமிருந்து வந்திருக்கலாமென்றுகூறலாம்" என்பதே. பூதத்துவபரிசோதனையால், இந்துமகாசமுத்திரமானது ஒருகாலத்திற் பெரிய தேசமாயிருந்ததோடு அதன்றிசைகள் சீனம், ஆபிரிக்கா,

ஆஸ்திரேலியா, குமரிவரை முறையே கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கெல்லைகளாகவும், லெமூரியாவென்ற பெயரினையுடையதாகவுமிருந்ததென்று சொல்லப்படுகிறது. இதுவன்றி ஆஸ்திரேலியா, இந்தியா, ஆபிரிக்கா முதலியவிடங்களிற் பேசப்படும் பாஷையொற்றுமை ஒருவாறிருத்தலின் இவர்கள் அந்நாடுகளினின்றும் வந்த குடிகளென்றுசொல்வதற்கின்றி, இந்தியா அவ்வளவுபரப்புடையதாகவிருந்ததென்றகொள்கையை வற்புறுத்தும். தமிழர் குடியேறினரென்பதைக்காட்டிலும் உண்மைவிசாரிக்கின் அதற்கு எதிரிடையாகவிருக்கலாம்.

மேல்நாட்டு மேதாவிகளும் கீழ்நாட்டு விற்பன்னர்களும், இதுவரை தமிழர்கள் இந்தியாவுக்குப் புறம்பேயுள்ள வொருதேயத்தினின்றுங் குடியேறியமாக்களென்னுங் கொள்கையையேயுட்கொண்டு அதற் குற்ற வாதாரங்களெல்லாம் ஒரே இனமா யிருந்ததைக் கூறினோம். இனி அவர்கள் இந்நாட்டினர்தா னென்னுங்கொள்கையைப் பற்றிச் சவிஸ்தாரமாகப்பேசுவோம். இந்தக்கோட்பாட்டின்படி தமிழர் நாட்டுப் பூர்வகுடிகளேயன்றி புறத்தேயமாக்க ளல்லரென்பதும், அவர்கள் ஆரியர்களால் வெளியேற்றப்படவும், ஜெயிக்கவுமுடியாத மாக்களென்பதும் ஒருதலை. இச்சாதியினாற் றமிழகம் எக்காலத்துக் குடியேற்றப்பட்டதென்பது சரித்திரத்திற்கும், மனிதருக்குள்ளேற்பட்ட பூர்வகதைகட்கும் புறப்பட்டதொன்றும். வனங்களாற் சூழ்ந்த இப்பாகத்தினை முதன்முதற் கடந்துவந்து பாண்டியனது ஆலவையையும் காட்சியையுங்கண்ட பிரதமவாரியன் வியப்புற்று மயங்கி அம்மயக்கத்தினிடத்தே சரண்புகுவானாயினன். எகிப்தை உரோமர் ஜயிப்பதற்குமுன்னும், பெதல்ஹெமில் கிறிஸ்துபிறப்பதற்குமுன்னரும் தமிழர் இதேமாதிரி இந்தவிடங்களிலேயே தென்பட்டனர். அஃதொன்றோ! கிரேக்கர் (யவனர்) போரவைச் சந்திப்பதற்குமுன்னரும், டோயல் தமது இராச்சியத்தை யிழப்பதற்குமுன்னும், பிளேட்டோ தமது சம்பாஷணைகளைச்செய்வதற்குமுன்னும் சாலமன் றமது பாக்களை யியற்றுவதற்குமுன்னருமே சுருங்கச்சொல்லில் தமிழர்கள் அநாதிதொட்டு பாலாற்றின்றெற்குமுதற் கடல்கொண்ட பஃறுளியின்வடக்குவரை பெருங்கீர்த்தியுடன் வாழ்ந்துவருகின்றனர்.

ஐரோப்பிய விற்பன்னர்கள் மேல்நாட்டு ஆரியர்களைப்பற்றி விசாரணைபுரியநேர்ந்தபோது, ஆசியா அவர்கட்குப் பூர்வீகக்கிரகமா யிருக்கக்கண்டதோடு, கிறிஸ்தவர்களுடைய பிரபஞ்சசிருஷ்டியும், அவர்களது சொர்க்கமும், ஏடன்சோலையி லவர்களது ஆதிப்பெற் றோர்கள்சரிதங்களு மதற்கு அநுகுணமாயிருந்தது. இந்துஐரோப் பியபாஷாகூட்டத்தில் சம்ஸ்கிருதம் ஒன்றாயிருந்ததுகொண்டு அவர் கள் எச்சாதியினரும், சனங்கள்பிறப்பிற்கிடமாயிருந்த மத்தியஆசி யாவினின்றுமே வந்திருக்கவேண்டுமென்று நம்பும்படிசெய்தது. மேல்நாட்டார், ஆரியர்களைப்போலவே மதியூகமும், நாகரீகமும் மிகப்பழுத்த நூல்களையுடைய ஆரியரின் வேறுபட்ட சாதியினர். மானிடவிகற்பநூலும், ஜனசாரக்கொள்கையும் வெளிப்படும்வரை மேனாட்டில் மிக்கமதியூகமுடையோருடைய சம்மதமும் அப்படியே தானிருந்தது. ஒருவிஷயத்தைப்பற்றி பொருகொள்கை மனதிற் பதியுமாயின், ஒருவன் ஆழ்ந்தயோசனையுடையவனாயினும் அவனது புத்தி யக்கொள்கையைவிட்டு அகலுதல் சுலபமானகாரியமன்று. இதுமட்டோ; மேனாட்டார் இந்தஆரியரின் வேறானசாதியினரது நூல்களை யறியார். சின்னாட்களின்முன்னர், நமது பூர்வகிரந்தங்கள் அச்சிடப்பெற்று வெளிவரவும், டாக்டர் போப் போன்றார் கண்கள் திறக்கப்பட்டு, தென்னிந்தியாசரித்திரமெழுதுமொருவன், அவனது சரித்திரம் உண்மையாகவிருக்க வேண்டுமாயின், பூர்வக்கிரந்தங்களை ஆராய்ந்தெழுதாமற்போனாற் பயன்றாதென்று கொண்டனர். இனி அவ்விதம் ஏதாவ தாதாரமுண்டாமோவென்று நான் இங்கு ஆராய வான்முன்வந்தேன்.

கால்டுவெல்பாதிரியார் திராவிடர்கள் வடநாட்டில் எப்போழு தாவதிருந்ததாகச் சாக்ஷியங்களாவது கதைகளாவதில்லையென்றுஒப்புக் கொள்கிறார்கள். (தடித்த எழுத்திலிருப்பவை என்னுடைய சொந்த அபிப்பிராயம்) அஃதங்ஙனமாயின்;—நான் நிச்சயமென்றே வற் புறுத்துகிறேன். ஒவ்வொரு சாதியினருக்கும், அவர்களது பூர்வ கிரந்தங்கள் யாப்பிலமைக்கப்பட்டிருத்தலொன்றுகலான், இயற்றமிழ் நூல்களும் தமிழரதுபுராதனநாட்டைப்பற்றியும் கூறியிருக்கவேண்டும்.

பர்னல், கால்டுவெல்பாதிரிமார்கள் தமிழருக்கு கி. பி. 8, 9 நூற்றாண்டுகட்குமுன்னர்த் தமிழ்நூல்களில்லையென்று கூறியகூற்று

காலற்றதாமென மிஸ்டர் கனகசபைப்பிள்ளையும், இந்தியகல்வெட்டு ஆராய்ச்சியாரும் செவ்வனே விளக்கியிருக்கின்றனர்; இதுவன்றி பிளேனி, ஸ்டிராபோ, தாலமி, பெரிப்ளஸ் முதலியவர்கள் எழுதியதி னின்றும் சிலப்பதிகாரம் முதல்நூற்றாண்டி லியற்றப்பட்டதெனப் பிள்ளையவர்கள் நிரூபணம்செய்திருக்கின்றனர். போர்போன மிஸ்டர் சுந்தரம்பிள்ளையவர்கள் பத்துப்பாட்டைப்பற்றியெழுதியவியாசத்தில் அவற்றின் காலவரையறையை வெகுதிட்டமாய்க் கூறியிருக்கின்றனர்.

அடிக்கடி கூறப்படும் ஸம்ஸ்கிருதஇதிகாசங்களினாதாரத்தைத் தவிர்த்து கி. மு. மூன்றுநூற்றாண்டிலுண்டான பதஞ்சலியின் மகாபாஷியமும், 4-வது நூற்றாண்டிலுண்டான காத்யாயனரதுவார்த்திகமும், அசோகமஹாராஜனது கல்வெட்டுக்களும், மெகாஸ்தனிஸின் சரித்திரமும் பாண்டியனது இராசதானியைப்பற்றியும், தமிழரைப்பற்றியுங்கூறு மழியாச்சின்னங்களாகும். இவைகள் நந்தமிழ் நாட்டுவழங்கும் புராதனசரித்திரமான பாண்டிநாட்டைக் கடல் கொண்டவிஷயங்களைவற்புறுத்துகின்றன. லங்கைச்சரித்திரங்களான மஹாவம்சமும், தீமவம்சமும் இலங்கையில் முதலிற் குடியேறிய ஆரியர்களான மகதஎனியர்கள் கி. மு. 6 நூற்றாண்டில்பாண்டியனது மகளைவதுவைசெய்தனரென்று கூறுகின்றன. தொல்காப்பியமும், புறநானூற்றிற் சிலசெய்யுட்களும் இதற்குமுந்தியதென்று நிச்சயமாய்க்கூறலாம். முதற்சங்கத்திலிருந்த முடிநாகராயாரற்பாடப்பட்ட,

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என்று சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப் பாடிய புறநானூற்றுச்செய்யுள் பொய்யாறன்றென்பது கிறிஸ்தவாப்தவாரம்பகாலத்துநூலான சிலப்பதிகாரத்து 29-வது காதையில் "ஓரைவர் ஈரைம் பதின்ம ருடன்றெழுந்த, போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த, சேரன் பொற்றையன் மலையன்" என்பது நிலைநிறுத்தும்.

(இன்னும் வரும்.)

இலக்கண்விளக்கபரம்பரை,

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தலைவராகிய மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் மகாராஜா அவர்கள்மீது பாடிய புறநிலைவாழ்த்து.

---

## ஆசிரியப்பா.

அமர முனிவன் அகத்தியன் றனக்குத்
தமிழிய லருளியும் சங்க மிருந்தும்
அன்பினைந் திணைமுத லறுபது நூற்பா
நன்பொன் மணியென நானிலக் களித்தும்
அமிழ்துற ழுஞ்செந் தமிழ்க்குரவு பூண்ட
ஐயன் உமையமர் மெய்யன் பொடியணி
துய்யன் மழுவலக் கையன் காக்க
மாற்றலர்ச் செருக்கும் வலியொடு மறனும்
ஆற்றலர்க் களிக்கும் அளியுட னறனும்
தம்மி னுறழுபு சமங்கொடு மேவரப்
பாவலர் தொடுக்கும் பாவல ரலங்கல்
பூவலர் முல்லைத் தொடையொடும் புனைந்து
பொன்மலை யெனவெழூஉம் வின்மைசேர் தோள
தீதெலா மிரியுஞ் சேதுநன் னாட
தகவுமிக் குடைய முகவைமா நகர
உம்பரும் பரவு செம்பியர் மருக
படியெலாம் புகழ மிடியெலாங் குமைத்தே
அறிவுக்கதிர் விரித்துட் செறியிருள் பாற்றிய
பாற்கரன் பயந்த சேஎய் நூற்படு
புலத்துறை முற்றிய நலத்தகு செம்மல்
மெத்தும் புகழுறு முத்து விஜய
ரகுநாத ராஜ ராஜெசுவர சுகாலய

கூடலம் பதியிற் கூடிய நான்காஞ்
சங்கத் தலைமை தகவினி லேற்றே
யெங்கட் கெல்லா மிருங்களி யளித்த
தோன்றல்நின் முன்னோர் துளக்கற நாடித்
தொல்லிசை நட்ட நல்லியற் றமிழ்க்கு
நீயும் அனைய நீரை யாகி
ஊழி யூழி சிறந்து
வாழி வாழியிம் மண்மிசை யானே.

———:o:———

மருட்பா.

நன்மதுரைச் சங்கம் நலம்பெறு மாறிசைந்த
தன்மதுரை யேநற் றகவுளோய் கங்கையணி
மின்மலருஞ் செஞ்சடை மேலோன்றன்—இன்னருளால்
பீடுகெழு செல்வமொடு வழிவழி
நீடுவா ழியரிந் நிலமிசை யானே.

நடுக்காவேரி—மு. வேங்கடசாமிநாட்டார்,
Pandit, S. P. G. College, Trichy.

———:(o):———